ராகம் 93



# கிழக்கு கடற்கரைராகம்


ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்

அருட்பணி. காணிக்கைராஜ் G

**ஆசிரியர் குழு**

அருட்பணி. ராஜேஷ்
அருட்பணி. ஜார்ஜ்
அருட்பணி. சகாயராஜ்
திரு. ரோனா ஆல்பர்ட்

**வடிவமைப்பு**

இன்டிபென்ட் ஜீசஸ் பிரிண்டர்ஸ்,
சிவகாசி, Mob : 80568 06001

**அச்சில் உதவி**

L. சுபாஷினி



**திருத்தல முகவரி**

பாலவாக்கம் கடற்கரை
புனித அந்தோணியார் திருத்தலம்
38. எம்.ஜி.ஆர்.சாலை
பாலவாக்கம், சென்னை–41
தொ.பேசி: (044) 2449 3684, 044&2449 3442
மின்னஞ்சல்: seashorestantony@yhoo.co.in
இணையம்: www.seashorestanthony.org


## உள்ளே...


ஆசிரியர் பக்கம் ............ 02

யார் இந்த பிரித்திகா யாஷினி..?
அருட்பணி. ராஜேஷ் ............ 04

விதைப்பவன் விதைக்கப் புறப்பட்டான்
அருட்பணி. இயேசு ஆண்டனி ............ 06

அன்னையின் தாழ்ச்சி மீட்பரின் ஆட்சி
அருட்பணி. ராஜேஷ் ............ 09

உறவுகள் தொடர்கதை
பணி. ஜான் பிரான்சிஸ் ............ 12

ஞாயிறுசிந்தனைகள்
அருட்பணி. சகாயராஜ் ............ 15

இது நடந்தது ஒரு இரவில்
ரோனா ஆல்பர்ட் ............ 26

சாட்சிகள் ............ 30

அருள்மிகப் பெற்றவர் !
முனைவர் ம. டார்த்தி செல்வ மேரி ............ 31

புனித ஸ்தேவான்
அருட்பணி. ஜார்ஜ் ............ 34

கிறிஸ்து பிறப்பு பெருவிழா திருப்பலி நேரம்
2024 புத்தாண்டுத் திருப்பலி நேரங்கள் ............ 35

திரு குடும்பத் பெருவிழா ............ 36

திருத்தல திருப்பலி நேரங்கள் ............ 40



அருட்பணி. காணிக்கைராஜ்
திருத்தல அதிபர்

## ஆசிரியர் பக்கம்



**அன்பான வாசக நண்பர்களுக்கு ...**

**“உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக
உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக”**

பாலவாக்கம் கடற்கரை புனித அந்தோணியாரின் அன்புநிறை பக்தர்களுக்கும், “கடற்கரை ராகம்” மாத இதழின் வாசக நண்பர்களுக்கும் ஆண்டவர் இயேசுவின் பிறப்பு வாழ்த்துகளை பகிர்ந்துகொள்வதில் பெரிதும் மகிழ்கிறேன். இயேசுவின் பிறப்பு விழா உங்கள் வாழ்வில் அமைதியும், சமாதானமும், அனைத்து நலன்களையும் தந்திட வாழ்த்துகிறேன்.... ஜெபிக்கிறேன்.

கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாட எல்லோருமே திட்டமிட்டு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறோம். வணிக வளாகங்கள் தங்கள் வாடிக்கையாளர்களை கவரத் தொடங்கி விட்டன. ஆலயங்களில் தயாரிப்பு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. நமது குடும்பங்களில்கூட அவரவர் வசதிக்கேற்ப விழாவிற்கான காரியங்கள் செய்துவருகிறோம். இயேசுவின் பிறப்பு விழாவைக் கொண்டாடுவதும் மகிழ்ச்சியாக இருப்பதும் அவசியம் என்றாலும், இந்த ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடுவது கொஞ்சம் நெருடலாகவே நான் உணர்கிறேன். இயேசு பிறந்த நாட்டில் நடந்து வருகிற போர் நிகழ்வுகளை கேள்விப்படும் போது மனம் வலிக்கிறது.

இஸ்ராயேல் நாடு, பாஸ்தீனநாடு இடையே ஏற்பட்டுள்ள போரினால் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள், பெண்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர், மக்களுடைய வீடுகள் தரைமட்டமாகியுள்ளன. மருத்துவமனைகள் தகர்க்கப்பட்டுள்ளன. மக்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழ்கின்ற கொடூரம், உணவு இல்லாமல், மருந்து மாத்திரைகள் இல்லாமல் அவதிப்படும் நிலை. இயேசு பிறந்த இந்த நாட்டை புண்ணிய பூமி, புனித பூமி, Holy Land என்றெல்லாம் நாம் பெருமைப்பட்டுக் கொண்டு இருந்த நிலையில் இன்றைக்கு அங்கே நடப்பதைப் பார்த்தால் மனிதாபிமானம் கூட இல்லாமல் போய்விட்டதே என்று கவலைப்பட வேண்டியுள்ளது. ஏன் இந்த அவல நிலை? இந்த போருக்கு என்ன காரணம்? இந்த போருக்கு யார் காரணம்? யார் சரி, யார் தவறு? என்றெல்லாம் பல விளக்கங்கள் நமக்கு தரப்பட்டாலும், விவிலியம் தருகின்ற காரணம்தான் சரியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

வாக்கு மனிதர் ஆனார். நம்மிடையே குடிகொண்டார். யோவா 1:14

இயேசுவின் பிறப்பை வானதூதர் அறிவித்தபோது ‘‘உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக’’ என்று சொன்னார். கடவுளுக்கு உகந்த வாழ்க்கை வாழ்கிறபோது மட்டுமே உலகில் அமைதி உண்டாகும், என்பதில் ஐயமில்லை... நாம் எல்லோருமே கடவுளைக் காப்பாற்றுவதில், வழிபாட்டுத் தலங்களை காப்பாற்றுவதில், வழிபாடுகளை, சடங்குகளைக் காப்பாற்றுவதில் தீவிரம் காட்டுகிறோம். ஆனால் எல்லா கடவுளும், சமயங்களும், வழிபாடுகளும் சொல்கிற வாழ்க்கை முறையைக் கடைப்பிடிப்பதில் தீவிரம் காட்டுவதில்லை, ‘‘அயலானை அன்பு செய்’’ இந்த மந்திரம்தானே எல்லா மதங்களின் மந்திரமாய் உள்ளது. இந்த மந்திரத்தை, ஜெபத்தை வாழ்வாக்கும் போது இங்கு எப்படி ஆக்கிரமிப்பு வருகிறது, அடாவடித் தன்மை ஏற்படுகிறது, அடிமைப்படுத்தப்படுகிறது....?

புண்ணிய பூமி, போர்நிறைந்த பூமியாக மாறியுள்ள நிலையில் இயேசு பிறந்த இடத்தில், பல குழந்தைகள் இறந்து கொண்டிருக்கும் நிலையில் இயேசுவின் பிறப்பைக் கொண்டாடுவதில் சற்று தயக்கம் ஏற்படுகிறது. ஆனாலும் இயேசுவின் பிறப்பை நாம் கொண்டாட வேண்டும். காரணம் நமக்குள்யே இருக்கும் பகைமைகளை விடவேண்டிய நேரம் இதுதான். நம்மைச் சுற்றியுள்ள ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டிய நேரமும் இதுதான்.

அன்புடன்
அருட்பணி. காணிக்கைராஜ்



**இவருக்காகவே**
**நாம் காத்திருந்தோம்;**
**இவர் தரும் மீட்பில்**
**நாம் மகிழ்ந்து**
**அக்களிப்போம்..!**

**- எசா 25:9**





நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன. லூக் 2:31



# யார் இந்த பிரித்திகா யாஷினி..?

அருட்பணி. ராஜ்



“இனி மற்றவர்களுக்காக உழைப்பேன்” என்று கூறி 2017–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சென்னை காவல் துறை ஆணையர் ஸ்மித் சான் அவர்களிடமிருந்து Sub-Inspector பணி நியமன பொறுப்பை பெற்ற முதல் திருநங்கைதான் பிரித்திகா யாஷினி. இந்தியாவிலேயே காவல்துறை அதிகாரியாக இருக்கும் முதல் திருநங்கை K. பிரித்திகா யாஷினியின் இந்த வெற்றிப் பயணம் எளிதாக நடந்து விடவில்லை.

சேலம் மாவட்டத்தை சேர்ந்த ஓட்டுநர்–தையல்காரார் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார் பிரதீப். குழந்தைப்பருவத்தை எல்லா மாணவர்களைப்போல் மகிழ்ச்சியோடு தொடங்கினார். ஆனால் அம்மகிழ்ச்சி நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. தன்னுடைய உடலில் சில மாற்றங்கள் ஏற்படுவதை உணர்ந்து தனது பெற்றோரிடம் சொல்ல அவர்களோ கோயில்கள், மருத்துவர்கள், ஜோதிடர்கள் என்று தனது மகனைக் கொண்டு சென்றார்கள். பிரதீப்பின் செயல்கள் தன்னுடன் படிக்கும் மாணவர்களுக்கு வித்தியாசமாக தென்படுவதைப் பார்த்து கேலி செய்யத் துவங்கினார்கள். பள்ளிப் பருவம், கல்லூரிப் பருவத்தை தாண்டிய பிரதீப் தன்னுடைய இருபதாம் வயதில்தான், தான் ஒரு திருநங்கை என்பதை உணர்ந்தார். சேலத்தை விட்டு சென்னைக்கு பெற்றோர்களிடம் சொல்லாமல் ஓடி வந்தார். சென்னையில் திருநங்கைகளின் ஆதரவு பெற்று, விடுதி வார்டன், தொண்டு நிறுவன ஊழியர், ஹார்மோன் சிகிச்சை ஆலோசகர் என பல பணிகளை செய்து வந்தார். கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் பாலின மாற்று அறுவை சிகிச்சையை மேற்கொண்டு பிரித்திகா யாஷினி என்று தனது பெயரை வைத்துக்கொண்டார்.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் ஆட்சேர்ப்பு வாரியத்தில் (TNUBRB) 1087 பணியிடங்கள் நிரப்புவதற்காக தமிழ்நாடு காவல் துணைக் கண்காணிப்பாளராக ஆட்சேர்ப்புக்கு யாஷினி விண்ணப்பித்தார். ஆண், பெண் இரண்டு வகைகளில் எதையும் அவர் சார்ந்தவர் அல்ல என்பதால் அவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. மூன்றாம் பாலினத்தவருக்கென தனி வகையினம் ஒதுக்கப்படவில்லை. எனவே நீங்கள் பங்குபெற இயலாது என்று காரணம் சொல்லப்பட்டது.

யாஷினி மனம் உடைந்து போகவில்லை. முயற்சியை முடித்துக் கொள்ளவில்லை, தனக்கு நீதி வேண்டும் என்று நீதிமன்றத்திடம் முறையிட்டார். பல நீதிமன்றங்களை அணுகினார், இறுதியாக அவருக்கு எழுத்து தேர்வு நடத்த உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. நாளை தேர்வு என்றால் இன்று இரவு யாஷினிக்கு தேர்வு எழுவதற்கான கடிதம் கிடைத்தது. தேர்வுக்கு தன்னை தயார்படுத்திக்கொள்ள நேரம் கொடுக்கப்படவில்லை. ஆனாலும் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றார், அதையடுத்து உடல் தகுதித் தேர்வில் பங்கெடுத்து 400 மீட்டர், நீளம் தாண்டுதல், எறிபந்து ஆகிய போட்டிகளில் தேர்ச்சி பெற்று இறுதியாக 100

மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் 17.5 நொடிகளில் கடக்க வேண்டிய தூரத்தை 18.5 நொடிகளில் கடந்து தோல்வியுற்றார். 1 நொடி தாமதமாக வந்ததால் மீண்டும் அவர் இந்த பணிக்கு தகுதியற்றவர் என்று நிராகரித்தார்கள். மற்ற அனைத்திலும் தேர்ச்சிபெற்ற நிலையில் நொடி தாமதத்திற்கு தகுதியற்றவர் என்று அறிவித்ததை அடுத்து நீதிமன்றத்தின் உதவியை நாடினார் பிரித்திகா யாஷினி. நீதிமன்றம் வீடியோ ஆதாரங்களை பரிசோதித்து, மனிதாபிமான அடிப்படையில் அவர் தேர்ச்சி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. பின்னர் காவல் உயர் பயிற்சி மையத்தில் ஆண்டு பயிற்சி முடித்து தர்மபுரி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 2017-ம் ஆண்டு பொறுப்பேற்றார். பின்னர் சூளைமேடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக திருநங்கை யாஷினி பதவி வகித்தார் அதன்பின் பல்வேறு பொறுப்புகளில் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்.

பிரித்திகா யாஷினியின் வாழ்க்கை நமக்கெல்லாம் மிகப்பெரிய பாடத்தைத் தருகிறது. இன்றளவும் திருநங்கைகளுக்கென அங்கீகாரம் கொடுக்கப்படவில்லை. வீடு வாடகைக்கு தரப்படுவதில்லை. வேலை வாய்ப்புகள் வழங்கப்படுவது இல்லை. அவர்களுடைய உணர்வுகள், ஏக்கங்கள், வேதனைகள் கண்டுகொள்ளப்படுவது இல்லை. படிக்கும் வாய்ப்புகள் குறைவு அவர்களை புரிந்துகொள்பவர்கள் குறைவு, குடும்பத்தாரே ஒதுக்கும் நிலை. இப்படி சமூகத்தில் பல்வேறு பிரச்சனைகளை சந்தித்த பிரித்திகா யாஷினி இந்தியாவிலேயே முதல் காவல்துறை அதிகாரியாக பொறுப்பேற்ற பெருமை படைத்தவர்.

இவருடைய வெற்றிக்குப் பின், நிறைய வலிகள் இருக்கின்றன. நிறைய அவமானங்கள், அழுகை, கண்ணீர் மறைந்திருக்கின்றன ஏளனப் பேச்சுக்கள், விமர்சனங்கள் அவரை நோக்கி பாய்ந்திருக்கின்றன. தோற்றுப்போக நிறைய வழிகள் உண்டு. வெற்றியடைய ஒரே வழிதான். அது தன்னம்பிக்கை. தன்னம்பிக்கையுடன் வாழுங்கள் என்பது தான் யாஷினி நமக்கு தரும் பாடம்.

## பக்தி பொருட்கள் மையம்

**நமது திருத்தலத்தில் பக்திப் பொருட்கள் மையம் புதுப்பிக்கப்பட்டு அனைத்து வகையான திருச்சுரூபங்கள் திருப்படங்கள், ஜெபமாலைகள் விற்பனைக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. திருத்தலத்திற்கு வருகிறபோது பக்தி பொருட்கள் மையத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.**

### வாசகர்களுக்கு அன்பான வேண்டுகோள்:

**கடற்கரை ராக** ‹மாத இதழுக்கு நீங்கள் அளித்து வருகிற ஆதரவிற்கு மனமார்ந்த நன்றிகள்.
நமது திருத்தல மாத இதழை உங்கள் நண்பர்களுக்கு, உறவினர்களுக்கு அறிமுகப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.
ஆண்டு சந்தா - ரூ. 250/-
தொடர்புக்கு: **73583 65562**




தூயவர் என்பதே அவரது பெயரே. லூக் 1:49

# விதைப்பவன் விதைக்கப் புறப்பட்டான்

(புனித அந்தோணியாரின் மறையுரை - 2)



**முன்னுரை :**

புனித அந்தோணியாரின் மற்றுமொரு அற்புதமான மறையுரை இது. விதைப்பவன் உவமையை (லூக்8:5) தான் வாழ்ந்த காலச் சூழலுக்கேற்ற வகையில் போதித்துள்ளார். இன்றைக்கும் இந்த மறையுரை நமது வாழ்வுக்கு வெளிச்சம் பாய்ச்சுகிறது என்பதை உணர முடிகிறது. இந்த மறையுரையை அவர் ஐந்து பகுதிகளாக பிரித்து விதைப்பவன் உவமைக்கு விளக்கம் தந்துள்ளார். அவைகள்: 1.மறையுரையாளர்களுக்கான சிந்தனைகள் 2.வழியோரம் விழுந்த விதையின் விளக்கம் 3.பாறை மீது விழுந்த விதையின் விளக்கம் 4.முட்செடிகள் நடுவில் விழுந்த விதையின் விளக்கம் 5. நல்ல நிலத்தில் விழுந்த விதையின் விளக்கம். இந்த பகுதியில் முதல் பகுதியினை சிந்திப்போம்.

**மறையுரையாளர்களுக்கான சிந்தனைகள்:**

விதைப்பவன் உவமையின் தொடக்கத்தில் அந்தோணியார் இறைவார்த்தையை போதிப்பவர்களை மனதில் வைத்து இறைவார்த்தையை விதைக்கும் மனிதர்களாக அவர்களை கருதுகிறார். மறையுரையாளர்கள் எதைப் பின்புலமாக வைத்து இந்த பகுதியை போதிக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறார். ஈசாக்கு கேரார் பகுதியில் இறைப்பணி செய்ததை இயேசுவோடு ஒப்பிட்டுப் பேசுகிறார் (தொ.நூ26:12). விதைப்பவன் தன் விதையை விதைக்கப் புறப்பட்டான் [லூக்கா 8.5]. எங்கே விதைப்பது? நீரருகில் எல்லாம் விதைக்கிற நீங்கள் பேறுபெற்றவர்கள் (எசா 32: 20 ). நீர் என்றால்? இந்த நீர் என்பது யோவானை (திரு.வெளி 17 : 15 ) பொறுத்தவரை பல நாடுகள், பலஇனங்கள், பல மொழிகளைச் சார்ந்த மனிதர்களை குறித்துக் காட்டுகிறது. அப்படியென்றால் மக்கள் மனதில் இறைவார்த்தை விதைக்கப்படுகிறது. இறைவார்த்தையை மக்கள் மனதில் விதைப்பவர்கள் பேறுபெற்றவர்கள்.

**பாவத்தின் பக்கவிளைவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு போதனை:**

இறைவார்த்தையை போதிப்பவர்கள் பாவக் கசப்பில், பாம்பின் கடியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இறைவார்த்தை மருந்தாக தரப்பட வேண்டும்.இந்த மனிதர்கள் எப்படிப்பட்டவர்கள்? எல்லா ஆறுகளும் ஓடி கடலில் கலக்கும்; ஆறுகள் எங்கிருந்து வருகிறதோ அந்த இடத்திற்கு அவை மீண்டும் திரும்புகின்றன [சபைஉரை 1.7]. இது தொடக்க நிலை பாவம் மற்றும் மரணத்தின் இரு மடங்கு கசப்பைக் குறிக்கிறது. ஏனென்றால், ஆறுகள் எப்படி உப்பு நிறைந்த கடலில் தோன்றுவதுபோல, பூமியின் மக்கள் தொடக்க நிலை பாவத்தின் கசப்பில் எழுகிறார்கள். தாவீதும் "தீவினையோடு என் வாழ்வை தொடங்கினேன் ", (திபா 51 :7 ) என்கிறார். பவுலடியார் கூட, நாம் நம்முடைய ஊனியல்பின் தீய நாட்டங்களின் படி வாழ்ந்து இயல்பாக கடவுளின் சினத்துக்கு

ஆளானோம் என்கிறார் [எபே 2.3]. தாயின் வயிற்றில் இருந்து வெளியே வந்த நாளிலிருந்து அடக்கம் செய்யப்படும் நாள் வரை,ஆதாமின் பிள்ளைகள் மீது பாரமான நுகம் உள்ளது [சீரா 40.1]. மற்றும், மனிதனே மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்கு திரும்புவாய் [Gen 3.19] என்று கடவுளே மனிதனின் முடிவை குறிப்பிடுகிறார். "எல்லா நீர்மேலும் விதைக்கிற நீங்கள் பேறுபெற்றவர்கள்" என்ற வாசகத்தின் பின்னணியில், மேற்குறிப்பிட்ட மனித இயல்பை மனதில் இருத்த வேண்டும் என்கிறார். போதனைகள் மக்களை விடுதலைக்கு அழைத்து செல்ல வேண்டும்.

**விதைகளை விதைக்க விரும்புகிறேன்:**



இறைவார்த்தையை விதைக்கிறவராக தன்னை அடையாளப்படுத்துகிறார். "இன்றைய நற்செய்தியில் நம் ஆண்டவரே விளக்குவதுபோல் விதை என்பது கடவுளின் வார்த்தை. ஆசீர்வதிக்கப்பட்டவரின் ஆசீர்வாதத்தில் பங்கெடுக்க நான் தகுதியுள்ளவனாகக் காணப்பட வேண்டும் என்று நான் செபிக்கிறேன். அதனால்தான் இயேசு கிறிஸ்துவின் பெயரால் உங்கள் மீது விதைகளை விதைக்க விரும்புகிறேன். அவர் தந்தையின் நெஞ்சத்தில் இருந்து அவரது மீட்பின் விதையை விதைப்பதற்காக உலகில் நுழைந்தார். புதிய ஏற்பாட்டு கடவுளும், பழைய ஏற்பாடு குறிப்பிடும் கடவுளும், கடவுளின் மகனான இயேசுகிறிஸ்துவே. "இதை சொல்லுகிறவர் நானே என்பதை அந்நாளில் உணர்ந்து கொள்வார்கள். நான் இங்கே இருக்கிறேன்" (52.6) என்கிற எசாயாவின் பின்வரும் வார்த்தைகள் இயேசுவுக்கு பொருந்திப்போவதைக் குறிப்பிடுகிறார். மூதாதையருக்கு இறைவாக்குனர் மீட்பின் விதையைக் குறித்து வழியாக பேசிய கடவுள், மனுவுரு எடுத்து நம்மோடு பேசிய கடவுள் இயேசுவே. அவரே விதைக்கிறவர்.

**விதையும் நிலமும்:**

நான்கு விதமான நிலங்களை அந்தோணியார் பின்வருமாறு விளக்குகிறார். இச்சையோடு (lustful ) வாழ்பவர்கள் வழியோரம் விழுந்த விதைகள்; தவறான துறவிகள் (false religious) பாறை நிலத்தில் விழுந்தவர்கள்; பேராசைக்காரர்கள் முட்கள் நடுவே விழுந்தவர்கள், தியானம் செய்பவர்களும் நீதிமான்களும் நல்ல நிலத்தில் விழுந்த விதைகள். கிறிஸ்துவின் வாழ்க்கை(இறைவார்த்தை) நான்கு நிலைகளில் விழுகிறது. அதே ஆண்டில் அவர் நூறு மடங்கு பெற்றார். கிறிஸ்துவின் முழு வாழ்க்கையும் மன்னிப்பு மற்றும் நல்லெண்ணத்தின் கடவுளுக்குரிய ஏற்புடைய ஆண்டாக' அமைகிறது. எப்படி ஒரு வருடம் குளிர்காலம், வசந்தம், கோடை மற்றும் இலையுதிர் காலம் என நான்கு பருவங்களைக் கொண்டிருப்பது போல, கிறிஸ்துவின் வாழ்க்கை நான்கு நிலைகளில் நமது இதயங்களில் விழுகிறது.

இது குளிர்காலத்தில் தொடங்குகிறது, ஏரோதின் துன்புறுத்தல் மற்றும்

எகிப்திற்குள் தப்பிச் சென்றது. அதன் வசந்த காலம், மனம் மாறுங்கள், காலம் நிறை வேறிவிட்டது, இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது (மாற்1 :15) என்ற அவருடைய போதனைகளின் காலம்.

'வெப்பத்தின் நாள்' என்பது அவரது பாடுகளை, உறுதியான மனப்பான்மையுடன் ஏற்றுக் கொண்டு, சிலுவையில் துக்கப்படாமல், அலகையின் அழிவு, மனித இனத்தை அவனுடைய பிடியில் இருந்து விடுவித்தல், பாவத்தின் பிடியில் உள்ள மனிதர்களைக் கைப்பற்றுதல் ஆகியவற்றைப் பற்றி யோசித்தார். தண்டனை தீர்ப்பு வழங்கும் நாள் என் இதயத்தில் உள்ளது. [எசா 63.4] என்ற இறைவார்த்தையை மேற்கோள் காட்டுகிறார். இலையுதிர் காலம் என்பது இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறிக்கிறது, அவருடைய மனிதநேயம் அறுவடை செய்யப்பட்டு, துன்பம் என்ற பதர்கள் நீக்கப்பட்டு, மற்றும் மரணத்தின் தூசியிலிருந்து துடைக்கப்பட்டு, தந்தையாகிய கடவுளின் வலது கரமான களஞ்சியத்தில் சேமிக்கப்பட்டது.

**விதைப்பவர் தெளிவாக கிறிஸ்துவே!**



"அவர் அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்து நீங்கள் நூறு மடங்கு பெறுவீர்கள் [மத் 19.29] என்று சொன்ன வார்த்தைகள் எவ்வளவு பொருத்தமானவை.

நூறாவது ஆடு,மற்றும் மனித இனத்தை , ஒன்பது நிலைகளில் உள்ள தேவ தூதர்களின் குழுமத்தோடு வான் வீட்டில் சேர்க்க, மிகுந்த மகிழ்ச்சியோடு அவர் தனது தோள்களில் சிலுவையை அரவணைத்துக் கொண்டு வான்வீட்டிற்கு அழைத்து சென்றார். ஆம் உண்மையாக, விதைப்பவர் தெளிவாக கிறிஸ்துவே!

தொடரும்.



அருட்பணி. இயேசு ஆண்டனி

**திருத்தலத்தைப் பற்றி அறிய**

**Web: www.seachorestanthony.org**
**YouTube: Seashore St. Anthony Shrine**
**Twitter: User Name : @StAntonyShrine**
**Instagram: User Name :seashore_st_anthony_shrine**
**Facebook**

YouTube

Instagram

User Name :
Seashore St.Anthony Shrine Palavakkam

**அவருக்குப் பாடல் பாடுங்கள்;**
**அவரைப் புகழ்ந்தேத்துங்கள்!**
**அவர்தம் வியத்தகு செயல்கள்**
**அனைத்தையும்**
**எடுத்துரையுங்கள்! தி பா 105:2**

இதோ, என் தூதனை உமக்கு முன் அனுப்புகிறேன்; அவர் உமக்கு வழியை ஆயத்தம் செய்வார். மாற் 1:2-3

# அன்னையின் தாழ்ச்சி மீட்பரின் ஆட்சி



"ஆண்டவரை எனது உள்ளம் போற்றி பெருமைப்படுத்துகின்றது.. ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார்.

Humility is the truth..

Humility is the self acceptance..

Humility is the service...

புனித பெர்னார்ட் மூன்று முக்கிய நற்பண்புகளைக் குறிப்பிடுகிறார் ஒன்று தாழ்ச்சி... இரண்டாவது தாழ்ச்சி.. மூன்றாவது தாழ்ச்சி. தாழ்ச்சி எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கே எல்லாம் ஆண்டவர் ஈர்க்கப்படுகிறார் என்கிறார் பிரான்சிஸ் சலேசியார்.

தாழ்ச்சியின் இலக்கணம் இயேசு கிறிஸ்து .பிலிப்பு (2 :6 11) இல் "அடிமையின் தன்மை போன்று நம்மைப் போல் மனிதனாக மாறினார். சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவிற்கு தன்னை தாழ்த்திக் கொண்டார் "என சொல்லுவார் பவுல் அடிகளார்.

யோவான் ( 13:4–5) இல் சொல்லப்பட்டுள்ள பாதம் கழுவும் சடங்கில்" இயேசு பந்தியிலிருந்து எழுந்து தம் மேலாடையைக் கழற்றி வைத்துவிட்டு ஒரு துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டார். பின்னர் ஒரு குவளை தண்ணீர் எடுத்து தன் சீடருடைய காலடிகளை கழுவி இடுப்பில் கட்டி இருந்த துண்டால் துடைக்கத் துவங்கினார்". இயேசுவின் தாழ்ச்சிக்கு இதை விட சிறந்த உதாரணம் வேறு எதுவும் அளிக்க முடியாது.

அங்கே பாஸ்காவுக்காக கூடி இருந்த தன் சீடர்கள் ஒவ்வொருவரின் கால்களையும் துடைத்தார். தன்னை காட்டிக் கொடுத்த யூதாஸையோ மறுதலித்த பேதுருவையோ விட்டு வைக்கவில்லை. தன்னை விட்டு விலகிச் சென்று விடுவார்கள் என்று தெரிந்தும் அவர்கள் பாதங்களைக் கழுவினார். குவளை என்பது தாழ்ச்சியின் அடையாளம், நீர் என்பது அருளின் அடையாளம், துண்டினால் துடைத்தது மன்னிப்பின் அடையாளம். அவர் பாதங்களை மட்டுமல்ல அவர்கள் பாவங்களையும் துடைக்கிறார். தாழ்ச்சியின் அடையாளமாகவும் இலக்கணமாகவும் திகழ்ந்தவர் இயேசு. அதை தன் உதிரத்தில் தாங்கியவர் அன்னை மரியா. நிச்சயமாக அன்னை மரியா பெரும் பேறுபெற்றவர் என்றால் மிகையாகாது.

விண்ணகம் நோக்கிய பயணம்தான் தாழ்ச்சி. அதை அன்னை மரியா கற்றுத் தருகிறார். தாழ்ச்சிக்கு மிகச் சிறந்த உதாரணம் அன்னை மரியா.

மரியா கருவில் உதிக்கும்போதே பாவக்கறையின்றி பிறந்தார்.உலக மீட்பரும்,ஆண்டவருமான இயேசு ஒரு பெண்ணின் வயிற்றில் உதிக்கவேண்டும் என்றால், அவள் மாசின்றி இருக்க வேண்டும்.அதனால்தான் கடவுள் மரியாவை அமல உற்பவியாகத் தோன்றச் செய்தார். மரியாவின் இந்த அமல உற்பவம் கடவுள் தன்னுடைய மகன் இயேசுவின் பொருட்டு மரியாவுக்குக் கொடுத்த மிகப் பெரிய

கொடை என்று சொன்னால் அது மிகையாகாது.

தூய பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகம் (8:30), "தாம்முன் குறித்து வைத்தோரை கடவுள் அழைத்திருக்கிறார். தாம் அழைத்தோரை ஏற்புடையோரைத் தம் மாட்சியில் பங்கு பெறச் செய்தார் " என்று கூறியிருப்பதைப்போல தன்னுடைய மீட்புத் திட்டம் நிறைவேற வேண்டும் என்பதற்காக இறைவன் மரியாவைத் தேர்ந்தெடுக்கிறார். அவரைப் பல்வேறு வரங்களால் அணி செய்கிறார். இறைவன் மரியாவை அழைத்ததும் மரியா, "இதோ நான் ஆண்டவரின் அடிமை. உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்." என்கிறார். ஆகவே இறைவனின் மீட்புத் திட்டம் நிறைவேற தன்னையே தாழ்த்திக் கொண்டவர் அன்னை மரியா.

அடுத்ததாக இறைவன் மரியாவை தன்னுடைய மீட்புத் திட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்று அழைத்ததற்குப் பிறகு மரியா தான் ஆண்டவரின் தாய் என்ற ஆணவத்தில் வாழவில்லை, மாறாக அவள் தாழ்ச்சி நிறைந்தவளாகவே இருக்கிறார். எந்த அளவுக்கு என்றால் தன்னுடைய உறவுக்காரப் பெண்மணியாகிய எலிசபெத் பேறு காலத்தில் இருக்கிறாள் என்பதை அறிந்து உடனே அவளுக்கு உதவக் செல்கிறார். ஆண்டவரை பெற்றெடுக்க இருக்கும் தான் பெரியவள் என்ற ஆணவத்தில் இருக்கவில்லை. இவ்வாறு மரியா தன்னுடைய வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் தாழ்ச்சி நிறைந்தவளாகவே விளங்கினாள். அதனால்தான் கடவுள் அவரை மேலாக உயர்த்தினார்.

மரியாவிடம் விஞ்சி நிற்பது தாழ்ச்சியே. இறைவன் மரியாவின் கன்னிமையைக் கண்ணோக்கினார் என்று கூறாமல் அவர்தம் தாழ்ச்சியைக் கண்ணோக்கினார் என்று கூறுகிறார்." நான் ஆண்டவரின் அடிமை" என்று தம்மை தாழ்த்தியதால்தான் இறைவன் அவரை மீட்பரின் தாயாக உயர்த்தினார். அன்னை மரியா தாழ்ச்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர். அவருடைய வாழ்வில் பொறுமை, எளிமை, அன்பு காட்டுதல், மன்னித்தல், குறைகளை ஏற்றல் மற்றும் துன்பங்களை ஏற்றல் ஆகிய நற்குணங்கள் மிகுந்திருந்தன. அதனால்தான் இயேசு சிலுவையில் உயிர்விடும்போது தனது சீடரிடம் " இதோ உன் தாய்" என்று ஒப்படைத்துவிட்டுச் சென்றார். இயேசு சொன்னது சீடர்களுக்கு மட்டுமல்ல. நமக்கும் தான். இறைவாக்கினர் மீக்கா எழுதிய புத்தகத்தில் "எப்ராத்தா எனப்படும் பெத்லகேமே! யூதாவின் குடும்பங்களில் மிகச் சிறியதாய் இருக்கிறாய் ஆயினும் இஸ்ரேயலை என் சார்பாக ஆளப்போகிறவர் உன்னிடம் இருந்தே தோன்றுவார்" யூதா ஆட்சி மையங்கள் அனைத்திலும் சிறியது. ஆனால் அந்த சிறிய மையத்திலிருந்து தான் இறைவன் தன்னுடைய மகனைத் தோன்றச் செய்தார். அதுபோன்றுதான் மரியா எளியவளாக தாழ்ச்சி நிறைந்தவளாக இருந்ததால்தான் கடவுள் அவரை உயர்த்தினார்.

**Humility is the happiness....**



லூக் (1:39) "அன்னை மரியா விரைந்து செல்கிறார்". அன்னை மரியா எலிசபெத்தைப் பார்க்க விரைந்து செல்கிறார். இங்கு விரைந்து என்பது மகிழ்ச்சியை கொடுப்பதற்காக என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். எங்கு தாழ்ச்சி இருக்கிறதோ அங்கு மகிழ்ச்சியிருக்கிறது. மகிழ்ச்சி எங்கே இருக்கிறதோ அங்கு மரியா இருக்கிறாள். மரியா எங்கு இருக்கிறாரோ அங்கு இயேசு இருக்கிறார். இயேசுஇருக்கிறார் என்பது இறைவனின் பிரசன்னம் என்று பொருள். தாழ்வுற்ற இதயத்தில் ஆண்டவர் குடி கொண்டிருக்கிறார். தாழ்வுற்ற இதயம் ஆண்டவரைத் தாங்குகிற இதயம் ஆகிறது. அதாவது நற்கருணைப் பேழையாகிறது. நற்கருணைப்பேழை என்பது உடன்படிக்கை பேழை. அன்னை மரியே புதிய உடன்படிக்கைப் பேழை. அப்பேழையில் உடலாய் மலர்ந்த உடன்படிக்கை, உயிருள்ள இறைவார்த்தை நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே.

ஆம், அன்னையின் தாழ்ச்சி இறைவனின் மீட்புத் திட்டத்தின் முக்கிய அங்கம். மீட்பரின் அழியாத ஆட்சியின் சாட்சி!

அருட்பணி. ராஜேஷ்
திருத்தல உதவித்தந்தை



## Online Mass

திருத்தலத்தில் நடைபெறும் திருப்பலிகளை உங்கள் கருத்துக்களுக்காக **Online** வழியாக பதிவு செய்யலாம். கீழே உள்ள **UPI** பயன்படுத்தி திருப்பலி கருத்துக்களை பதிவு செய்து கொள்ளவும்.

## வளர்ச்சிப் பணிகளுக்கு உதவுங்கள்

திருத்தலத்தில் உள்ள வல்லமையுள்ள புனித அந்தோணியார் கெபியானது அழகுபடுத்தப்பட உள்ளது. இதனுடைய செலவு ரூ. 3 லட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது விருப்பம் உடைய புனித அந்தோணியார் பக்தர்கள் திருத்தல தந்தையர்களை தொடர்பு கொள்ளலாம்.

96299 99440 – திருத்தல அதிபர்

93607 97258 – திருத்தல உதவி அதிபர்

80129 18202 – திருத்தல உதவி அதிபர்

## ஜெப உதவி மையம்

**அன்பான சகோதர சகோதரிகளே உங்கள் விண்ணப்பங்களை கடவுளிடம் ஒப்புக்கொடுத்து உங்களுக்காக ஜெபிக்க ஜெப உதவி மையம் செயல்படுகிறது. ஜெப உதவி தேவைப்படுபவர்கள் திருத்தல உதவி பங்குத்தந்தை அருட்பணி. ஜார்ஜ் (8012918202) அவர்களை தொடர்பு கொள்ளவும்.**

உங்கள் விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு எழுதி அனுப்பவும்.

**கடற்கரை புனித அந்தோணியார் திருத்தலம்**
**எண் 38, எம்.ஜி.ஆர். சாலை**
**பாலவாக்கம், சென்னை- 41**

**ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்! அவர்தம் பெயரைச் சொல்லி வழிபடுங்கள்! அவர்தம் செயல்களை மக்களினங்கள் அறியச் செய்யுங்கள்.**
**தி பா 105:1**

ஆண்டவரே உமது பேரன்பு வானளவு உயர்ந்துள்ளது. தி பா 57:10

# உறவுகள் 4 - தொடர்கதை





பணி. ஜான் பிரான்சிஸ்
உளவியல் நிபுணர்

**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே**
(திருமந்திரம்)



ஆற்றுப்படுத்துதல் (Psychological Counselling) என்றால் என்ன என்ற வினாவோடு சென்ற இதழில் நிறைவு செய்தோம்.

இதைப் பற்றிய நமது எண்ண அலைகளை இம்முறை ஓட விடுவோம். ஆற்றுப்படுத்துதல் என்ற சொல் எங்கனம் உதித்தது?

ஆற்றுதல், ஆறுதல், தேற்றுதல், தேறுதல், மனக்காயங்களை நலமாக்குதல், மனப்புண்களுக்கு மருந்திடுதல், மனதை ஆக்கிரமித்துக் கொண்டு நம்மை முன்னும் பின்னும் செல்லவிடாமல் அலைக்கழிக்கும் எண்ணங்களை வழிப்படுத்துதல், மனதில் ஆழமாக பதிக்கப்பட்டிருக்கும் ஒரு சில உதவாத, பிடிவாதமான நம்பிக்கைகளை ஒழுங்கு செய்தல் இப்படியான பல்வேறு புரிதல்களை நோக்கி நகர்வது ஆற்றுப்படுத்துதல் ஆகும்.

இன்னொரு கோணத்தில் ஆறு என்பது தனக்கான பாதைகளை சென்றவிடமெல்லாம் நீரின் பாய்ச்சலுக்கு ஏற்றாற்போல அமைத்துக் கொண்டு கடலை நோக்கி நகர்வது போல, ஆற்றுப்படுத்துதல் என்பது நமது வாழ்வுக்கான இலக்குகளை அடைய தடையாக இருப்பவற்றை இனங்கண்டு, அவற்றை சீர்செய்து நம் வாழ்வெனும் நீரோட்டத்தை தெளிவாக ஆக்கிக் கொள்வது எனவும் புரிந்து கொள்ளலாம்.

ஆற்றுப்படுத்துதல் என்றதும் அதை நெறியாளுகை செய்பவர் யார் என்ற கேள்வி உடனே தொக்கி நிற்கிறது. இதை நெறியாளுகை செய்யக்கூடிய நபர் குறைந்தபட்சம் 6 மாத காலம் பட்டயப் படிப்போ அல்லது 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இளங்கலை / முதுகலை படிப்பு படித்தவர் எனப் பொருள்படுவார். மேலோட்டமான அறிவு, ஒரு சில புத்தகங்களை நுனிப்புல் மேய்தல் போன்றவை ஆற்றுப்படுத்துநராக ஒருவரை மாற்றி விட முடியாது என்பதை நாம் இக்கணத்தில் திட்டவட்டமாக கூற வேண்டியுள்ளது.

சரி! ஆற்றுப்படுத்துதல் நமக்குத் தேவையா? எனது துன்பமான ஆழங்களில், மனங்கசிந்து அழும் நேரங்களில் துணையாக எனது பெற்றோர், உடன்பிறந்தோர், உறவுகள் மற்றும் உற்ற தோழர்களை விடவும் ஓர் ஆற்றுப்படுத்துநர் என்னை நன்றாக புரிந்து கொண்டு உதவ முடியுமா என்ற கேள்வி இயல்பாகவே மனதில் எழும். இவ்வாறு எனக்கு அதிகமாக தெரிந்த நபரோடு நான் உரையாடுவதுதானே சரியாக இருக்கும் என்ற உங்களது



கேள்விக்கு நீங்களே பதில் சொல்லி விடுவீர்கள். நெருங்கிய உறவுகள் இருந்தும் எனது கடின சூழல்களை அவர்களிடம் விவரித்தும் அவர்களால் பெரிதும் உதவ முடியவில்லை என்பதை உணர்ந்து கொள்ளும் வேளையில் ஆற்றுப்படுத்துதலில் கைதேர்ந்த நபரை தேர்வு செய்து சந்திக்கும் காலம் வந்திருப்பதை நாம் உணர்கிறோம்.

குடும்ப இடியாப்பச் சிக்கலில் சிக்கித் தவிக்கும் ஜமீலா என்ன ஆனாள் என்பதை வரும் வழியில் தொலைத்து விட்டோம் என நீங்கள் எண்ண வேண்டாம்.

தனிமையின் வாட்டம் என்ன வென்பதை இரண்டு பிஞ்சுகளோடும், வெளிநாட்டில் வேலை பார்க்கும் ஆணவரோடும் கூடிய தனது வாழ்வில் அதிகமாக துன்பம் அனுபவித்து வந்த வேளையில் அவர் மிகவே மனம் நொந்தழுது புதிய வழிகளை தேடிக் கொண்டிருக்கும் வேளையில் ஆற்றுப்படுத்துநரை அவர் சந்திக்கச் சென்றார்.

" நமக்கிருக்கும் கம்ப்யூட்டர் மூளை உடனே என்ன சொல்கிறது என்பதை பார்ப்போம். ஆம், ஜமீலா ஆற்றுப்படுத்துதலுக்கு சென்றுவிட்டாள், இன்றே அவளது குடும்ப சூழல்களை சரி செய்து கொள்வாள் என நாம் நினைப்பதை சரியில்லை என்று யார்தான் சொல்லுவார்"

ஆற்றுப்படுத்துநர் ஜமீலாவை சாவகாசமாக அமரச் செய்து விட்டு அவரிடம் சிறிது நேரம் பேசினார். என்ன பிரச்சினை என்பதை கேட்டறிந்த உடனே அதற்கான தீர்வை நோக்கி நகரவில்லை. மாறாக அவரது அன்றாட வாழ்வு எவ்வாறெல்லாம் அவரது பிரச்சினையால் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது என்பதை தெரிந்து கொண்டார். உடனடி தீர்வு என்பது சாத்தியமில்லை என்று நன்குணர்ந்த வேளையில் அவளது மனமென்னும் குரங்கை நெறிப்படுத்தும் ஒரு சில உத்திகளை சொல்லிக் கொடுத்தார்.

அதில் ஒன்றை மட்டும் இவ்வேளையில் பதிவு செய்வது உகந்தது எனவே எண்ணுவோம்.

அலைபாயும் மனதையும், தொடர்ச்சியாக மனதை ஆக்கிரமித்து நம்மை வெளிறச் செய்து நமது மன அமைதிக்கு இடையூறாக இருக்கும் எண்ணங்களை நெறிப்படுத்தும் வழிகளில் ஒன்று: எண்ணங்களை தொடர்ச்சியாக எழுதுதல்.

## இதை எப்படி செய்வது?



ஒருநாளில் 15 முதல் 20 மணித் துளிகளை உள்ளடக்கிய பின் மாலையில் ஒரு பொழுதினை முதலில் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

எனக்குத் துணை செய்யும் ஆண்டவர் என் பக்கம் உள்ளார். தி பா 118:7

நமது எண்ண அலைகளில் நாம் சிக்குண்டு தவிக்கும் வேளையில் அந்த எழுதும் நேரத்தை நினைவு கூர்ந்து அவ்வேளையில் இந்த எண்ணங்களை பதிவிடுவேன் என நமக்குள்ளாகவே சொல்லிக் கொள்ளுதல்

இவ்வாறு காலை முதல் மாலை வரை எத்தனை முறை நமது எண்ணங்கள் நம்மை அலைக்கழித்தாலும் மாலை நேர எழுதுதலை மனதில் கொள்ளுதல் அவசியம்.

எண்ணங்களையும் மற்றும் அத்தோடு தொடர்புடைய உணர்ச்சிகளை இணைத்து எழுதுதல் நல்லது.

மீண்டும் மீண்டும் வந்த எண்ணங்களே வந்தாலும் மறவாமல் அதைப் பதிவு செய்தல் நற்பயிற்சியாகும்.

ஒரு வாரம் அல்லது பத்து நாள்கள் இப்படியான பழக்கம் நமது மனதை ஆக்கிரமிக்கும் எண்ண ஓட்டங்களிலிருந்து நமக்கு விடுதலை தரும்.

தோழர்களே! நமது சூழல்களில் இதைப் பொருத்தி, நமது எண்ணங்களின் பட்டியலை அறிந்து கொள்ளமுற்படுவோமா? முயற்சி செய்து பாருங்கள்!

நூல் நீளும்.

**திருத்தலத்தின் விருப்பு உறுப்பினராக மாறலாமே**

அன்பான அந்தோணியார் பக்தர்களே, பாலவாக்கம் திருத்தலத்தில் விருப்ப உறுப்பினராக மாறி, உங்கள் உடல் உழைப்பு, செபஉதவி, ஆலோசனைகள், நன்கொடைகள் வழியாக திருத்தலத்திற்கு உங்கள் பங்களிப்பை தரலாம்.

தொடர்புக்கு: 044 - 24493684



## திருத்தலத்தின் இம்மாத நிகழ்வுகள்

**05.12.2023 மாதத்தின் முதல் செவ்வாய். புனித அந்தோணியாரின் சிறப்பு நாள்.**

**திருப்பலிகள்**

- ★ **காலை : 06.00 மணிக்கு** ஆராதனை, தமிழ் திருப்பலி
- ★ **காலை : 07.15 மணிக்கு** ஆங்கிலத் திருப்பலி
- ★ **காலை: 08.30 மணிக்கு திருப்பலி**
- ★ **காலை: 11.00 மணிக்கு** நற்கருணை ஆராதனை, எண்ணெய் மந்திரிப்பு தமிழ் திருப்பலி- தேர்பவனி.
- ★ **பிற்பகல்: 03.00 மணிக்கு திருப்பலி**
- ★ **மாலை: 06.00 மணிக்கு** நற்கருணை ஆராதனை, தமிழ் திருப்பலி- தேர்பவனி.

**அருள் உணவு (அன்னதானம்) வழங்கும் நிகழ்வு**

அன்பு வாசகர்களே. ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் நண்பகல் 1.00 மணியளவில் திருத்தலத்திற்கு வருகை புரிகிற அனைத்து அந்தோணியார் பக்தர்களுக்கும் அருள் உணவு வழங்கப்படுகிறது. அந்தோணியாரை தேடி வருபவர்களின் பசியைப் போக்குவதற்கு நீங்கள் முன் வரலாம். உங்கள் திருமண நாள், பிறந்த நாள், வீடு புகுமனை நாள், இறந்தோர் நினைவு போன்ற நாட்களில் அருள் உணவுக்கான உங்கள் நன்கொடைகளை தந்து உதவுங்கள்.

தொடர்புக்கு:

☎ : 96299 99440

மனிதர் மீது நம்பிக்கை வைப்பதைவிட ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம். தி பா 118:8



# ஞாயிறு சிந்தனைகள்




அருட்பணி. சகாயராஜ்

செய்யூர் உதவி பங்குத்தந்தை




**திருவருகைக் காலம் முதல் ஞாயிறு**
**(03.12.2023)**
**I எசாயா 63:16-17, 64:1:38 II 1கொரி 1:39**
**நற்செய்தி - மாற்கு 13:33-37**




**“விழிப்பாய் இருப்போம்”**
**“விழிப்பாய் இருப்போம்”**

அன்பு சகோதர சகோதரிகளே இன்று அன்னையாம் திருஅவை ஒரு புதிய வழிபாட்டு ஆண்டைத் தொடங்குகின்றது அதன் முதல் பகுதியாக திருவருகைக் காலம் அமைகிறது. திருவருகைக் காலம் ஆண்டவர் இயேசுவின் முதல் வருகைக்கு கடவுளுக்கு நன்றி செலுத்தும் காலமாகவும், முதல் வருகையை நினனத்து அதைக் கொண்டாடும் காலமாகவும் மேலும் ஆண்டவருடைய இரண்டாவது வருகை நிச்சயம் என்று நம்பவும் அதற்காக காத்திருக்கவும், விழிப்பாக இருந்து நம்மையே தயாரிக்கும் காலமாகவும் இந்த காலம் அமைந்திருக்கிறது. இன்றைய மூன்று வாசகங்களும் ஆண்டவருடைய இரண்டாவது வருகைக்காக கவனமாகவும் விழிப்பாகவும் இருக்க அழைப்பு விடுக்கின்றது. விழிப்பாய் இருப்பது என்றால் என்ன? விழிப்பாய் நாம் ஏன் இருக்க வேண்டும்? விழிப்பாய் இருந்தால் நமக்கு என்ன கிடைக்கும்? என நாம் இன்றைக்கு

1.**விழிப்பாய் இருந்தது என்றால் என்ன?**

“தன் நிலையை அறிவதே விழிப்பாய் இருப்பது” என்கிறது இன்றைய முதல் வாசகம். இஸ்ராயல் மக்கள் தங்களின் பாவ வாழ்க்கையே கடவுளின் அருளையும் ஆசியையும் பெற தடையாய் இருக்கிறது என்பதை உணர்ந்தவர்களாய், தங்களின் நீதியற்ற செயல்களே தங்களை பாபிலோனிய அடிமைத்தனத்திற்கு அழைத்துச் சென்றது அதுவே தங்களுடைய துன்பத்திற்கு காரணம் என்பதை அறிந்து கொண்டார்கள் எனவே தான் “நாங்கள் பாவம் செய்தோம்; நெடுங்காலமாய் பாவம் செய்திருக்க, நாங்கள் மீட்கப்படுவது எங்ஙனம்? நாங்கள் அனைவரும் தீட்டுப்பட்டவரைப் போல் உள்ளோம்; எங்கள் நேரிய செயல்கள் எல்லாம் அழுக்கடைந்த ஆடைபோல் ஆயின; நாங்கள் யாவரும் இலைபோல் கருகிப் போகின்றோம்; எங்கள் தீச்செயல்கள் காற்றைப் போல் எங்களை அடித்துச் சென்றன. உம் பெயரைப் போற்றுவார் எவரும் இல்லை; உம்மைப் பற்றிக் கொள்ள முயல்பவர் எவரும் இல்லை; நீர் உம் முகத்தை எங்களுக்கு மறைத்துள்ளீர்; எங்கள் தீச்செயல்களின் பிடியில் எங்களை அழியவிட்டீர். (எசாயா 64:57) என்று தாங்கள்பாவத்தில் இருப்பதை முழுமையாக அவர்கள் உணர்ந்து கொண்டார்கள் எனவே தான் “ஆண்டவரே நீர் எங்கள் தந்தை; நாங்கள் களிமண், நீர்

எங்கள் குயவன்; நாங்கள் அனைவரும் உம் கைவேலைப் பாடுகளேஆண்டவரே, கடுஞ்சினம் கொள்ளாதிரும்; குற்றத்தை என்றென்றும் நினையாதிரும்;



உம் மக்களாகிய எங்கள் அனைவரையும் கண்ணோக்கும். (எசாயா 64:9) என்று தங்களையே கடவுளுடைய கைகளில் முழுமையாய் ஒப்படைக்கிறார்கள் எனவே விழிப்பாய் இருப்பது என்பது நாம் பாவத்தில் இருக்கிறோமா அல்லது தூய வாழ்க்கையை வாழ்ந்து வருகிறோமோ என்பதை நாம் ஆய்ந்து அறிந்து கடவுளின் இரக்கத்திற்காக அவரின் மீட்புக்காக இறைஞ்சுவதே என்கிறது இன்றைய முதல் வாசகம்.

புனித இரண்டாம் ஜான்பால் அவர்கள் சொல்லுகிறார் "உலகத்திலேயே மிகப்பெரிய பாவம் என்பது நான் பாவத்தில் இருக்கிறேன் என்று தெரியாமலேயே வாழ்வது தான் என்று சொல்லுகிறார்". இன்றைக்கு நம்மில் பல பேர் நாம் பாவத்தில் இருக்கிறோம் என்று தெரியாமலேயே வாழ்ந்து வருகிறோம் நம்முடைய செயல்கள்கடவுளுக்கு அருவருப்பாக இருக்கிறதா என்று தெரியாமல் வாழ்ந்து வருகிறோம் எனவே நாம் எல்லோரும் நம்மை நாமே முழுமையாய் அறிந்தவர்களாய் நாம் கடவுளுக்கு உகந்தவர்களாக இருக்கிறோமா பாவ வாழ்க்கையில் இருக்கிறோமா தூய்மையாய் வாழ்ந்து வருகிறோமா என்பதை நாம் ஒவ்வொரு நாளும் கவனத்தோடு சுய பரிசோதனை செய்ய அழைக்கப்படுகிறோம்.

**2. நாம் ஏன் விழிப்பாய் இருக்க வேண்டும்?**

ஆண்டவர் இயேசு கிறிஸ்து தான் மீண்டும் வருவேன் என்று சொன்னவர் தான்



எப்பொழுது வரப்போகிறேன் என்று சொல்லாமல் சென்றதற்கு காரணம் "இயேசு வருகிற நேரம் நமக்கு தெரிந்தால் நம்மில் பல பேர் அவருடைய வருகை வரும் வரைக்கும் போலித்தனமான ஒரு வாழ்க்கையை வாழக்கூடும். நாம் அப்படி ஒரு போலித்தனமான வாழ்க்கை வாழாமல் எப்பொழுதும் தூய்மையான வாழ்க்கை வாழவே ஆண்டவர் இயேசு தான் எப்பொழுது வரப்போகிறேன் என்று சொல்லாமல் "விழிப்பாயிருங்கள். ஏனெனில் அந்நேரம் எப்போது வரும் என உங்களுக்குத் தெரியாது. ஏனெனில் வீட்டுத் தலைவர் மாலையிலோ, நள்ளிரவிலோ, சேவல் கூவும் வேளையிலோ, காலையிலோ எப்போதுவருவார் என உங்களுக்குத் தெரியாது (மாற்கு 13:33) என்றார் அவரின் வருகைக்காக நாம் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும், எப்பொழுதும் கவனமாகவும் விழிப்பாகவும் இருக்க வேண்டும் என்பதை ஆண்டவர் இயேசு குறிப்பிடுகிறார்.

இன்றை நற்செய்தியின் கடைசிப் பகுதியிலே "நான் வருகின்ற பொழுது யாரும் தூங்கிக் கொண்டிருப்பதை நான் பார்க்கக் கூடாது" என்று சொல்லி தன்னுடைய ஆசையை வெளிப்படுத்துகிறார்.

எனவே இந்த தூக்கம் என்பது பாவ வாழ்க்கையாக இங்கே குறிப்பிடப்படுகிறது (மாற்கு 13:37) எனவே பாவ வாழ்க்கையில் ஈடுபடாமல் எப்பொழுதும் தூய்மையான வாழ்க்கை வாழ அழைக்கப்படுகிறோம்.

**3. விழிப்பாய் இருப்பதால் கிடைக்கும் பலன்கள்?**

இரண்டாவது வாசகம் நாம் விழிப்பாய் இருப்பதால் கிடைக்கும் நன்மையைப் பற்றி எடுத்துரைக்கிறது. அருள் கொடைகள் எதிலும் குறைவில்லா வாழ்க்கை.

“ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்காக காத்திருக்கும் உங்களுக்கு அருள் கொடை எதிலும் குறையே இல்லை” (1கொரி 1:6) என்று புனித பவுலடிகளார் ஆண்டவருடைய இரண்டாவது வருகைக்காக காத்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு எடுத்துரைக்கிறார்.

**#இறுதி வரை உறுதிப்படுத்துவார்**

எப்பொழுதும் பாவமில்லாமல் வாழ்வது தூய்மையாக இருப்பது என்பது மிகப்பெரிய சவாலான காரியமாக இருக்கிறது. எனவேதான் ஆண்டவர் நாம் எப்போதும் தூய்மையாக வாழ நமக்கு முன்னால் வருகிற எல்லாவிதமான சவால்களில் இருந்து நாம் திடம் கொள்வதற்காக இறுதிவரை நம்மை உறுதிப்படுத்துவார் (1 கொரி 1:7) என்கின்ற செய்தி மிக புனித பவுல் அடிகளார் மூலம் கொடுக்கப்படுகிறது.

**#ஆண்டவர் இயேசுவின் நட்பு உறவில் பங்குகொள்கிற வாய்ப்பு.**

யார் யாரெல்லாம் ஆண்டவருடைய வருகைக்காக விழிப்பாய் இருந்து தங்களையே தயார் படுத்திக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் கடவுள் இயேசு கிறிஸ்துவின் நட்பு உறவில் பங்கு கொள்கிற வாய்ப்பும் அவரின் நிலை வாழ்வை கொடுக்கிறார். (1கொரி 1:9)

முடிவாக ஆண்டவர் இயேசுவினுடைய வருகைக்காக நாம் எப்பொழுதும் விழிப்பாய் இருந்து ஒவ்வொரு நாளும் நம்முடைய செயல்களை நற்செயலாக மாற்றி அதற்கான உந்து சக்தியை இறைவனிடமிருந்து பெறுகிற வேளையிலே ஆண்டவருடைய வருகையின் பொழுது நமக்கு நிலை வாழ்வு கிடைக்கும் என்பதை இன்றைய வாசகங்கள் நமக்கு எடுத்துச் சொல்லுகின்றன. எனவே அன்பு சகோதர சகோதரிகளே நாம் எல்லோரும் கூட எப்பொழுதும் விழிப்பாய் இருந்து தன் நிலையை அறிந்து ஆண்டவருடைய வருகைக்காக நம்மை நாமே தயாரிப்போம் அவருடைய வருகைக்காக காத்துக் கொண்டிருப்போம்.

**திருவருகைக் காலம் இரண்டாவது ஞாயிறு**
(10.12.2023)
**I எசாயா 40:15,911, 64:1:38 II 2பேதுரு 3:814**
**நற்செய்தி - மாற்கு 1:1-8**

**“கடவுளின் அன்பு”**



திருவருகைக் காலம் ஆண்டவருடைய வருகைக்காக நம்மையே தயாரிக்கும் காலமாக இருக்கிறது மறுபுறத்திலே ஆண்டவருடைய இரக்கத்தையும் அவரின் அன்பையும் பற்றி சிந்தித்து அதற்கு நன்றி செலுத்தும் காலமாகவும் அமைகிறது. இன்றைய மூன்று வாசகங்களும்

நம் தலைவர் மாண்புமிக்கவர்; மிகுந்த வல்லமையுள்ளவர். தி பா 147:5

ஆண்டவருடைய அன்பைப் பற்றி நமக்கு சிறப்பான முறையில் எடுத்துக் காட்டுகின்றன அவருடைய மன்னிக்கும் அன்பையும், அவரின் காத்திருக்கும் அன்பையும் மற்றும் மீட்பின் அன்பையும் பற்றி இந்த வாரம் நாம் சிந்தித்து தியானிப்போம்.

## 1. மன்னிக்கும் அன்பு



இஸ்ராயேல் மக்கள் பாவம் நிறைந்த மக்களாக ஆண்டவரின் கட்டளையை மதிக்காமல் வாழ்ந்தவர்களாய் (எசா–:5) ஆண்டவரைப் புறக்கணித்து அவரை அவமதித்து அவரை அறியாதவர்களாய் இருந்தார்கள் (எசா1:3) எனவே ஆண்டவர் தன் இறைவாக்கினர் எசாயா மூலமாக அவர்களை எச்சரித்தும் அவர்கள் தங்களுடைய பாவ வாழ்க்கையிலே வாழ்ந்ததால் கடவுள் அவர்களை கண்டிக்கிறார் எனவே அவர்களை பாபிலோனிய அடிமைத் தனத்திற்கு மக்கள் மிக இரக்கம் கொண்டு அவரின் அன்பின் மிகுதியால் அவர்களை பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்கிறார். எனவேதான் இன்றைய முதல் வாசகத்தில் எசாயா இறைவாக்கினர் மூலமாக "ஆறுதல் கூறுங்கள்; என் மக்களுக்குக் கனிமொழி கூறுங்கள் எருசலேமிடம் இனிமையாய் பேசி, உரத்த குரலில் அவளுக்குச் சொல்லுங்கள்; அவள் போராட்டம் நின்று விட்டது; அவள் குற்றம் மன்னிக்கப்பட்டது; அவள் தன் பாவங்கள் அனைத்திற்காகவும் ஆண்டவர் கையில் இருமடங்கு தண்டனை பெற்றுவிட்டாள். (எசாயா40:1–2) என்று இஸ்ராயல் மக்களை மன்னித்து ஆண்டவர் கடவுள் ஏற்றுக் கொள்கிறார். தானே அவர்களின் ஆயராக இருந்துஅவர்களை கூட்டிச் சேர்த்து, அவர்களை தன் தோளில் சுமந்து கவனித்துக் கொள்வேன் என்கின்ற உறுதியையும் அவர் கொடுக்கின்றார். இவ்வாறாக ஆண்டவருடைய மன்னிக்கின்ற அன்பை வெளிப்படுத்துகிறார்.

## 2. காத்திருக்கும் அன்பு திருவருகைக் காலம்

ஆண்டவரின் வருகைக்காக நாம் காத்துக் கொண்டிருக்கும் காலம் மட்டுமல்ல, மாறாக ஆண்டவர் கடவுள் நமக்காக, நம்முடைய மனமாற்றத்துக்காக, நம் தூய வாழ்வுக்காக காத்துக் கொண்டிருக்கிற காலம் என்பதையும் நாம் மறந்து விடலாகாது. இதையே இரண்டாவது வாசகம் அழகாய் எடுத்துச் சொல்கிறது.

ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பின்பு இயேசுவின் இரண்டாவது வருகை உடனடியாக இருக்கும் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள் ஆனால் ஆண்டவரின் வருகை காலம் தாழ்த்தப்படவே பலஅந்திக் கிறிஸ்துவர்கள் (போலி கிறிஸ்தவர்கள்) இயேசுவின் இரண்டாவது வருகை வராது என்கின்ற பொய்யான போதனையை பரப்பினார்கள். இதற்கிடையே தான் புனித பேதுரு அவர்கள் இயேசுவின் வருகை தாமதிக்கப்படுவதற்கான காரணம் என்ன என்பதையும் அவருடைய வருகை நிச்சயம் வரும் என்கின்ற செய்தியை மக்களுக்கு எடுத்துச்சொல்லி புது நம்பிக்கையை கொடுக்கிறார்.



இன்று இரண்டாவது வாசகத்தில் ஆண்டவருடைய இரண்டாவது வருகை ஏன் தாமதிக்கப்படுகிறது என்கின்ற கேள்விக்கு புனித பேதுரு அவர்கள் அருமையான விளக்கத்தை சொல்லுகிறார் "ஆண்டவர் தம் வாக்குறுதியை நிறைவேற்றக் காலந் தாழ்த்துவதாகச் சிலர் கருதுகின்றனர். ஆனால், அவர் அவ்வாறு காலந் தாழ்த்துவதில்லை. மாறாக, உங்களுக்காகப் பொறுமையோடிக்கிறார். யாரும் அழிந்து போகாமல், எல்லாரும் மனம்மாற வேண்டுமென விரும்புகிறார். ("2பேதுரு 3:9) என்று சொல்லி ஆண்டவருடைய காத்திருக்கும் அன்பை புனித பேதுரு அவர்கள் வெளிப்படுத்துகிறார்.

அன்பு சகோதர சகோதரிகளே, ஆண்டவர் கடவுள் எவ்வளவு அளவுக்கு நம் மீது அன்பு கொண்டவராக இருந்தால் நாம் ஒருவரும் அழியாமல் எல்லோரும் நிலை வாழ்வை பெற வேண்டும் என்று அவர் விரும்புவார் நாம் பாவம் செய்தாலும் கூட ஆண்டவர் கடவுள் அன்றைக்கு எப்படி ஊதாரி மைந்தனுகாக காத்துக் கொண்டிருந்தாரோ அப்படியாகவே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் நம் ஒவ்வொருவருடைய மன மாற்றத்திற்காகவும் தூய வாழ்வுக்காகவும் காத்துக் கொண்டிருக்கிறார் இதுவே அவரின் காத்திருக்கும் அன்பை நமக்கு வெளிப்படுத்துகிறது. இதுவே அன்பின் உச்சமாகவும்இருக்கிறது.

ஆண்டவர் இயேசுவினுடைய இரண்டாவது வருகை என்பது நிச்சயம் என்பதையும் "திருடனைப் போல" நினையாத நேரத்தில் அவருடைய வருகை இருக்கும் என்பதையும் பேதுரு அவர்கள் சொல்லுகிறார் எனவே இயேசுவுடைய இரண்டாவது வருகையை எதிர்பார்த்து இருக்கும் நாம் அனைவரும் மாசு அற்றவர்களாகவும் நல்லுறவு கொண்டவர்களாகவும் ஒவ்வொரு நாளும் வாழ முயற்சி எடுக்க வேண்டும் என்றும் புனித பேதுரு அவர்கள் அழைப்பு விடுக்கிறார்.

### 3. மீட்பளிக்கும் அன்பு



பாவத்தின் விளைவாக சாவைப் பெற்று இருந்த மனித இனத்தை தனது அன்பின் மிகுதியால் தன் ஒரே மகனை கொண்டு மீட்க கடவுள் திருவளம் கொண்டார் எனவே தன் மகனின் வழியை ஆயத்தம் ஆக்குவதற்காக யோவானை தன்மகனுக்கு முன்பாக அனுப்பினார். யோவானும் கடவுளின் கட்டளையை ஏற்று "பாலை நிலத்துக்கு வந்து, பாவமன்னிப்பு அடைய மனம் மாறி திருமுழுக்குப் பெறுங்கள் என்றுபறைசாற்றி வந்தார். (மாற்கு நற்செய்தி 1:4) மக்களுக்கு தண்ணீரால் திருமுழுக்கு கொடுத்தார். இயேசுவின் வருகைக்குப் பின்பாக இயேசு நாம் பாவிகளாக இருந்த பொழுதும் கூட நமக்காகப் பாடுகள்பட்டு மரணம் அடைந்து தன் உயிர்ப்பின் மூலமாக

நம்மை ஆண்டவர் கடவுளோடு ஒப்புரவாக்கி நமக்கு மீட்பு கொடுத்தார். எனவே ஆண்டவருடைய மீட்பளிக்கும் அன்பு அவரின் திருமுழுக்கு மூலமாக நமக்கு வெளிப்படுத்தப்படுகிறது. எனவே ஆண்டவருடைய தூய ஆவியின் திருமுழுக்கு பெற்றிருக்கிற நாம் அனைவருமே ஆண்டவருடைய மீட்பின் அன்பு பெற்றிருக்கிறோம். நாம் நம்முடைய திருமுழுக்கின் வாக்குறுதிகளை நம் வாழ்வில் நிறைவேற்றுகிறோமா என்பதையும் கூட நாம் சிந்திக்க திருவருகைக் காலம் நமக்கு அழைப்பு விடுகிறது.

**சிந்திப்போம்**

கடவுள் அன்பாய் இருக்கிறார். எனவே அவரின் மன்னிக்கும் அன்பையும் காத்திருக்கும் அன்பையும் மீட்டு கடவுளுக்கு நன்றி சொல்லுவோம். நாமும் கூட பிறரை மன்னிக்கின்றவர்களாய் பிறருடைய மனமாற்றத்திற்கு காத்துக் கொண்டிருப்பவர்களாய் நம்மையே பிறருக்காய் முழுமையாய் கொடுக்கின்றவர்களாய் வாழ இந்த திருவருகைக் காலத்திலே நாம் முயற்சி எடுப்போம். ஆண்டவர் நமக்காய் காத்துக் கொண்டிருக்கிறார். நம்முடைய மன மாற்றத்திற்காய் காத்துக் கொண்டிருக்கிறார் என்பதை புரிந்தவர்களாய் ஒவ்வொரு நாளும் நம்முடைய வாழ்வை புனிதமாக வாழ முயற்சி எடுப்போம்.

**திருவருகைக் காலம் மூன்றாம் ஞாயிறு**
**(17.12.2023)**
**I எசாயா 12, 10-11, 64:1:38 II தெச 5:16-24**
நற்செய்தி - யோவான்1:6-19-28

**முன்னுரை**



திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு Gaudium Sunday மகிழ்ச்சியின் ஞாயிறு என்று அழைக்கப்படுகிறது. இன்றைய வாசகங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கான அழைப்பை நம் முன் வைப்பது மட்டுமல்லாமல் மகிழ்ச்சியைப் பெறுவதற்கான வழிகளையும் சுட்டிக்காட்டுகிறது "எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள்" என்று புனித பவுல் இன்று இரண்டாவது வாசகத்தில் கூறுகிறார். "ஆண்டவரில் நான் பெருமகிழ்ச்சி அடைவேன். என் கடவுளின் உள்ளம் பூரிப்படையும் என்று எசா அக்களிக்கிறார்" இத்தகைய மகிழ்ச்சியை நம் வாழ்வில் நாம் அடைய அவற்றை பெறுவதற்கான இரண்டு வழிகளை இன்றைய வாசகத்தின் பின்னணியில் நாம் சிந்திப்போம்.

**1.கடவுளோடு இணைந்திருப்போம்.**

இயேசு தனது இறுதி உணவின்போது தன் சீடர்களிடம் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பதற்கான பதிலை "சொல்லுகின்றார் யோவான் நற்செய்தி 15ஆம் அதிகாரத்தில் இயேசு இவ்வாறு சொல்கின்றார் "நான் உங்களோடு இணைந்து இருப்பேன் அப்பொழுது என் மகிழ்ச்சி உங்களில் இருக்கும் உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெறும் "(15:1-15) என்று எடுத்துச் சொல்லுகிறார் எனவே ஆண்டவர் கடவுளோடு நாம் இணைந்து இருக்கின்ற பொழுது நம்முடைய மகிழ்ச்சி நிறைவானதாக இருக்கும் என்பதை இயேசு நமக்கு எடுத்துச் சொல்லுகிறார்.

இன்றைய முதல் வாசகத்தில் “நான் கடவுளோடு இணைந்து இருப்பதினால் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கிறேன், என்றும் கடவுள் என்னை அவரின் தூதுவனாய் அனுப்பி இருக்கிறார். அவரின் விடுதலையை எனக்கு தந்து, பிற இனத்தார் முன்பாக என்னை முன்னேறச் செய்திருக்கிறார் என்றும் “ஆண்டவரின் ஆவி என் மேல் உள்ளது ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார்” என்று சொல்லி தன்னுடைய வாழ்வின் மகிழ்ச்சிக்கு காரணம் கடவுளோடு இணைந்து இருப்பது தான் என்கின்றார் இறைவாக்கினர் எசாயா, பல வேளைகளில் நாம் துன்பங்கள் இல்லாத வாழ்வை மகிழ்ச்சியான வாழ்வு என்றும் துன்பங்கள் இருக்கும் வரையில் மகிழ்ச்சியாக இருக்க முடியாது என்றும் எண்ணுகின்றோம். இது சரியான பார்வை அல்ல உதாரணத்திற்கு புனித பவுலடியாரை எடுத்துக் கொள்வோம் வாழ்வில் ஏராளமான துன்பங்களையும், வேதனைகளையும் போராட்டங்களையும் சந்தித்தவர். தனது கடிதங்களில் பல இடங்களில் தான் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டதை, சாட்டையால் அடிக்கப்பட்டதை, பட்டினி கிடந்ததை, கல்லெறியப்பட்டதை கண்ணீர் மல்க விவரிக்கின்றார். ஆனால் இவ்வளவு துன்பங்களுக்கு மத்தியிலும் “நாங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கின்றோம் “(2கொரி6:10) என்று கூறுகின்றார். துன்பங்களுக்கு மத்தியிலும் இறைவனோடு இணைந்து இருந்ததன் காரணமாகவே அவரால் எப்பொழும் மகிழ்ச்சியாக இருக்க முடிந்தது. வாழ்வின் எல்லா சூழ்நிலைகளிலும் முக்கியமாக துன்பங்களுக்கு மத்தியிலும் அவர் மகிழ்ச்சியாக இருந்ததால் தான் “எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள்.

இதுவே இறைவனுடைய திருவுளம் “என்று இன்றைய இரண்டாவது வாசகத்தில் எடுத்துச் சொல்கிறார். புனித லாரன்ஸ் அவர்களுடைய வாழ்வை பார்க்கின்ற வேளையில் தன்னை தீச்சட்டியில் ஒருபுறம் சுட்ட பின்பும் கூட அவர் மிகுந்த மகிழ்ச்சியோடு அந்த மன்னரை பார்த்து சொல்கிறார். என்னை மறுபக்கமும் திருப்பிப் போடுங்கள் என்று. தான் சாகும் தறுவாயிலும் கூட மகிழ்ச்சியாக ஒருவரால் இருக்க முடிகிறதுஎன்றால் காரணம் அவர் ஆண்டவர் கடவுளோடு இணைந்து இருந்தார் கடவுள் நம்பிக்கைக்குரியவர். அவர் என்னைப் பார்த்துக்கொள்வார் என்கின்ற அந்த நம்பிக்கை உணர்வு அவரிடம் இருந்தது. எனவே, அவர் மிகுந்த மகிழ்ச்சியோடு தன் வாழ்வை முடித்துக் கொள்கிறார். எனவே, என் அன்பு சகோதர சகோதரிகளே, நாமும் கூட எல்லா வேளைகளிலும் மகிழ்ச்சியாக இருக்க முடியும் நாம் கடவுளோடு இணைந்து இருக்கின்ற பொழுது. கடவுள் நம்மோடு இருக்கின்றார் என்கின்ற அந்த நம்பிக்கை நம்மோடு இருக்க வேண்டும்.

அன்றைக்கு எம்மாவு சீடர்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் சொன்னது போல ஆண்டவரே நீர் எங்களோடு தங்கும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டது போல நம்முடைய ஜெபங்களும் ஒவ்வொரு நாளும் இருக்கட்டும் அப்பொழுது



கண்டிப்பாக நம் வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பதற்கு குறை இருக்காது அது நிறைவாய் இருக்கும்.

இயேசுவின் முன் தான் ஒன்றும் இல்லாதவன் அடிமையிலும் தரம் குறைந்த அடிமை என்பதை திருமுழுக்கு யோவான் உணர்கிறார். எனவேதான் அவர் தன்னிலை அறிந்து நான் “ஒளி அல்ல; மாறாக, ஒளியைக் குறித்துச் சான்று பகர வந்தவர். நீங்கள் அறியாத ஒருவர் உங்களிடையே நிற்கிறார்; அவர் எனக்குப்பின் வருபவர்; அவருடைய மிதியடிவாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை” என்று (யோவான் 1:26–27). தன்னையே மிகவும் தாழ்த்திக் கொண்டு எந்த ஒரு பெயருக்கும் ஆசைப் படாமல் தன்னுடைய அடையாளம் இந்த உலகத்திற்கு தெரியப்படாமல் ஆண்டவர் இயேசுவை அவர் உயர்த்திப் பிடிக்கிறார். எனவே, இந்த தாழ்ச்சியின் மனநிலைதான் அவருக்கு மகிழ்ச்சியை அதுவும் நிறைவான மகிழ்ச்சியை; கொடுத்து. இயேசுவும் “மானிடர்களாய் பிறந்தவர்களில் திருமுழுக்கு யோவானைப் போல சிறந்தவர்கள் யாருமில்லை” என்று சொல்லி அவரை மேன்மைப்படுத்துகிறார். (மத் 11:11)

இன்றைக்கு பல பேர் ஒரு சிறு செயலை செய்தாலும் கூட அதில் தங்களுக்கு என்ன கிடைக்கும் 'அதில் தங்களுடைய பெயர் நிலைத்து நிற்குமா தங்களுக்கான அடையாளம் அதில் இருக்கிறதா என்று பார்த்து தங்களையே உயர்த்தி பிடிக்கிறார்கள். பல ஆலயங்களில் பல கிறிஸ்துவ மக்களும் கூட தாங்கள் கொடுக்கிற காணிக்கைப் பொருட்களிலும் கூட தங்களுடைய பெயர்கள் இருக்க வேண்டும் என்று சொல்லி பெயர்களை பொறித்துக் கொடுக்கிற பழக்கம் இன்றும் கூட இருக்கிறது.

இப்படியாக நாம் நம்மை முன்னிலைப்படுத்தும் வேளையிலே கண்டிப்பாக நிறைவான மகிழ்ச்சி நமக்கு கிடைக்காது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எப்பொழுது நம்மையே தாழ்த்தி இது கடவுளால் கொடுக்கப்பட்டது, நான் கடவுளிடமிருந்து இதைப் பெற்றுக் கொண்டேன். என் செல்வமும், என்னுடைய பதவியும், என்னுடைய படிப்பும், என்னுடைய ஞானமும் எல்லாம் கடவுள் எனக்கு கொடுத்த பிச்சை என்பதை எப்போது நாம் நினைத்துப் பார்க்கிறோமோ அப்பொழுது கண்டிப்பாக நம்மடைய வாழ்க்கையிலே ஆணவம் குறையும். நான் என்கின்ற அந்த அகங்காரம் கரையும் மகிழ்ச்சி நிறைவு பெறும்.

**சிந்திக்க :**

எனவே, என் அன்பு சகோதர சகோதரிகளே இன்றைக்கு நம் வாழ்க்கையிலும் கூட நிறைவான மகிழ்ச்சி கிடைக்க வேண்டுமென்றால், நாம் கடவுளோடு இணைந்திருப்போம். மேலும் நம்மையே தாழ்த்தி கடவுளை முன்னிலைப்படுத்துவோம். இந்த இரண்டையும் நமதாக்கிக் கொள்கின்ற வேளையில் கண்டிப்பாக நம்மால் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க முடியும். ஆண்டவருடைய அந்த நிறை மகிழ்ச்சியை நம்மால் பெற்றுக்கொள்ள முடியும். எனவே, அன்பு சகோதர சகோதரிகளே நாம் ஒவ்வொருவரம் ஆண்டவரிலே மகிழ்ச்சி கொள்வோம். அவருடைய மகிழ்ச்சியில் நிறைவு பெற்று நம்மோடு இருக்கின்றவர்களையும் எப்போது மகிழ்ச்சியாக வைத்திருப்போம்.

**அனுபவமே நம் பள்ளிக் கூடம்**

நீரே என் மகன்; இன்று நான் உம்மை ஈன்றெடுத்தேன். தி ப 13:33

## திருவருகைக் காலம் நான்காம் ஞாயிறு (17.12.2023)

I 2சாமுவேல் 7:1-5,8-12,17-16 II உரோமையர் 16:25-27

நற்செய்தி லூக்கா 1:26–38



**முன்னுரை**

என் அன்பு சகோதர சகோதரிகளே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு பெருவிழாவுக்கான தயாரிப்பின் இறுதிக்காலத்தில் இருக்கின்றோம். திருவருகை காலத்தினுடைய நான்காவது ஞாயிறு அன்னை மரியா எப்படியாக இறைவனுடைய மீட்புத்திட்டத்தில் தன்னையே உட்படுத்திக்கொண்டார். என்பதையும் அதற்காக அன்னை மரியாவுடைய எப்படியாக இறைவனுடையசெய்த காரியங்களையும் சிந்திக்க அழைப்பு விடுக்கின்றது.

ஆண்டவர் கடவுள் இந்த உலகத்திற்கு மீட்பை கொடுக்க வேண்டும் என்று நினைத்த பொழுது தன் மகன் மூலமாக அதைக் கொடுக்க முடிவு செய்கிறார். தன் மகனை யார் மூலமாக இந்த மண்ணுலகில் பிறக்கச் செய்வது என்று அவர் தேடுகின்ற வேளையிலே அன்னை மரியாளை ஆண்டவர் கடவுள் தேர்ந்து கொள்கிறார். தன் மகனே சுமப்பதற்கு அன்னை மரியாளிடையே விருப்பத்தை ஆண்டவர் கடவுள் நாடுகின்றார் எனவே தன் வான தூதரை அன்னை, மரியாளிடம் அனுப்பி “மரியா, அஞ்சவேண்டாம்; கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்; அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார்; உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது” என்றார்” உடனடியாக அன்னை மரியாளும் கூட இறைவனுடைய வார்த்தைகளுக்கு கீடிப்படிந்து தன்னையே தாழ்த்தி “நான் ஆண்டவருடைய அடிமை உன் சொற்படியே எனக்கு நிகழட்டும் “என்று ஆண்டவருடைய மீட்பு திட்டத்தில் தன்னை இணைத்துக் கொள்கின்றார்.

புனித அகஸ்டின் பின்வருமாறு கூறுகிறார் “உன்னை படைப்பதற்கு கடவுள் உன்னை தேடவில்லை ஆனால் உன்னை மீட்பதற்கு அவர் உன் ஒத்துழைப்பை நாடுகின்றார். உன்னோடு கரம் சேர்க்கின்றார்” எனவே ஆண்டவருடைய மீட்பை நாம் பெற வேண்டுமென்றார் நம்முடைய ஒத்துழைப்பு கண்டிப்பாக இருக்க

வேண்டும் அன்னை மரியாளை போல நாமும் கூட “ஆம் ஆண்டவரே உன் சொற்படியே எனக்கு நிகழ்வு” என்று சொல்லி கடவுளுடைய வார்த்தைகளை ஏற்றுக் கொள்கின்ற வேளையில் கண்டிப்பாக நமக்கு மீட்பு இருக்கிறது. எனவே அன்னை மரியாளை போல நாமும் ஆம் என்று சொல்லி இயேசுவுடைய மீட்பை பெற்றுக் கொள்வோம்.

**2. அன்னை மரியாள் வைத்திருந்த விசுவாசம் அளப்பரியது. முழு நம்பிக்கையோடு வாழ்வோம்**

அன்னை மரியாவை விசுவாசத்தின் தாய் என்று சொன்னால் அது முழுக்க, முழுக்க பொருந்தும். அவளது விசுவாசம் ஒவ்வொரு வார்த்தையிலும், வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் வெளிப்படுகிறது. இன்றைய நற்செய்தியில் இயேசு “உன்னத கடவுளின் மகன் எனப்படுவார்” என்ற செய்தி வானதூதரால் முன்னறிவிக்கப்படுகிறது. ஆனால் நடந்தது என்ன? இயேசுவை அன்னை மரியா காதுபடவே இழிவாகவும். குறையாகவும் பேசினர். ஆனால், அன்னை மரியா தனது விசுவாசத்தை சிறிதும் இழக்கவில்லை. யாரிலே தான் நம்பிக்கை வைத்திருந்தோமோஅவரே சிலுவையில் அறையப்பட்டு தனது உயிருக்காக துடித்துக் கொண்டிருந்த போதிலும், இறுதியாக இறந்தபோதிலும் அன்னை மரியா தனது விசுவாசத்தை இழக்கவில்லை. கடவுளின் வார்த்தை நிறைவேறும் என்று உறுதியாக நம்புபினார். ஒன்றுமில்லாமையிலிருந்து இந்த உலகத்தைப் படைத்த கடவுளால், இறந்தவர்களுக்கு உயிர் கொடுக்க முடிந்த கடவுளின் ஆற்றலால் அனைத்துமே நடக்கும் என்று அன்னை மரியாள் நம்பினார். அதனால் தான் விசுவாசத்தின் தாயாக இன்று உயர்ந்து நிற்கிறார். தனது பிறப்பு முதல் வாழ்வின் கடைசி மூச்சு வரை, கடவுள் மட்டில் அன்னையிடத்தில் இருந்த அந்த விசுவாசம் நமதாக வேண்டும். அவரது விசுவாசப் பண்பை நாமும் நமது வாழ்க்கையில் வாழ்ந்து காட்ட வேண்டும். வாழ்வில் நம்பிக்கை இழந்த சூழ்நிலையையும் கடவுள் மாற்றக் கூடிய வல்லமை படைத்தவர் என்று கடவுள் மட்டில் நமக்குள்ள விசுவாசத்தை இன்னும் ஆழப்படுத்துவோம்.

**3. துன்பத்தைத் தாங்கி.**



மரியாவின் வாழ்க்கையில் எதிர்பாராத நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்தன திருமண ஒப்பந்தம் ஆகி, இல்லறம் நடத்துவதற்கு முன் மரியா கடவுளின் திருமகனைத் தம் உதரத்தில் கருத்தாங்க அழைப்புப் பெறுகிறார். இது வியத்தகு நிகழ்ச்சி மட்டுமல்ல, மரியாவைப் பொறுத்த மட்டில் இது பெரும் அதிர்ச்சி தரும் செய்தியாக இருந்தது. இந்நிகழ்ச்சிக்குப் பின் யோசேப்பு மரியாவின் வாழ்வில் நிகழ்ந்ததைப் புரிந்து கொள்ள

மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது என்றார் லூக் 12:15

திணறிக் கொண்டிருந்தார். இதுவும் மரியாவுக்கு ஒரு சோதனையாகவே அமைந்திருக்க வேண்டும். குழந்தைப் பேறு நெருங்கியதும் தம் குழந்தையை ஈன்றெடுத்து வசதியாகக் கிடத்துவதற்குக் கூட அவருக்குக் கிடைத்தது தீவனத் தொட்டியே. குழந்தை இயேசு எருசலேம் கோலிவில் காணாமற்போன நேரமும் மரியாவுக்குப் பெருவேதனை தந்தது. ஆனால் இத்துயரமான தருணங்களிலும் மகிழ்ச்சியான நேரங்களிலும் மரியா மரியாவுக்கு ஏற்பட்ட மாபெரும் வேதனை அவர்தம் அருமை மைந்தன் எதிரிகளால் கொடுமைப் படுத்தப்பட்டதும், இயேசுவின் தோள்மேல் சிலுவை சுமத்தப்பட்டு இறுதியில் அச்சிலுவையில் ஒரு குற்றவாளி போல அறையப்பட்டு உயிர் துறந்ததுமே. இத்துயரம் மரியாவின் இதயத்தை ஈட்டி போல் துளைத்தது. இந்த நேரங்களிலெல்லாம் மரியா மனஉறுதி இழக்கவில்லை, உள்ளம் தளரவில்லை. மாறாக, கடவுளின் வல்லமையில் நம்பிக்கை கொண்டார். கடவுளால் எல்லாம் இயலும் என்பதை மரியா இருத்தருணங்களில் மிக ஆழமாக உணர்ந்தார். மரியா கடவுளின் “அடிமை” என்றதும் கடவுள் அடிமைத் தனத்தை ஏற்கிறார் என்று பொருளாகாது. மாறாக, மரியா தம்மைப் படைத்து பாவத்திலிருந்து காப்பாற்றிய கடவுளையே தம் வாழ்வின் மையமாகக் கொண்டிருந்தார் என்பதே பொருள் இவ்வாறு செயல்பட்டதால் மரியா தம் சொந்த விருப்பத்தை நிறைவேற்ற முனையவில்லை. கடவுளின் திருவுளம் இவ்வுலகில் நிறைவேற வேண்டும் என்பது மட்டுமே மரியாவின் வாழ்க்கை நோக்கமாக இருந்தது.

நம் ஆண்டவருடைய திட்டத்திற்கு அவரடைய மீட்புக்கு ஆம் என்று சொல்லுகிற வேலையில் நம் வகையில் வருகிற ஏராளமான சவால்களையும் ஏராளமான துன்பங்களையும் பிரச்சினைகளையும் கூட மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்கின்ற மனநிலையை நாம் பெற்றிருக்க வேண்டும் என்பதை அன்னை மரியாளிடமிருந்து நம்மால் கற்றக் கொள்ளமுடிகிறது.



**கடைசியாக**

என் அன்பு சகோதர சகோதரிகளே ஆண்டவருடைய பிறப்பு விழாவை கொண்டாடப் போகிறேன் நாம் அனைவருமே நம்முடைய உள்ளம் என்கின்ற கதவை திறந்து வைத்து ஆண்டவருக்கு “ஆம்” என்று சொல்லி அவரை நம்முடைய இல்லத்திலும் உள்ளத்திலும் வரவேற்போம். அப்படியாக அவருடையடைய மீட்பில் இணையும் நாம் அவருக்காக பாடுகளையும் துன்பங்களையும் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்ளவும், கடவுள் இருக்கிறார் என்கின்ற நம்பிக்யையில் தொடர்ந்து வாழ பிறக்கப் போகிற இயேசுவிடம் தினமும் ஜெபிப்போம்.

உன்னால் நன்மை செய்யக் கூடுமாயின், தேவைப்படுபவர்க்கு அந்த நன்மையைச் செய்ய மறக்காதே. நீ மொ 3:27

# இது நடந்தது ஒரு இரவில் – (சிறுகதை)



மொபைல் போனில் பேசி முடித்துத் திரும்பிய சேவியர் தன் மனைவி லில்லியிடம் பொறுமினான்; "உதவி செய்யப்போய் எவ்வளவு தொந்தரவு நமக்கு. இறந்துட்டாங்களே ராணியம்மா, அவங்க மகள் மாதவி பேசினாள். கடைசியாக ஹாஸ்டலில் தன் அம்மாவைப் பார்த்த போது தங்க மோதிரம் போட்டிருந்தாராம். இறக்கும்போது அதைக் காணலையாம். நம் வீட்டிலே தங்கியதால் இங்கே எங்கேயாவது விழுந்திருக்குமோன்னு தேடிப் பார்க்கச் சொல்கிறாள். நமக்கு இருக்கும் குடும்பக் கஷ்டம் போதாதென்றா இந்த மாதிரி பிரச்சினைகள்..." என்றான். லில்லி சமாதானப்படுத்தினாள். "அமைதியாயிருங்க. தேடிப் பார்க்கத்தானே சொன்னாங்க. நாம் எடுத்துக்கிட்டோமுன்னு சொல்லலையே?." என்றாள்.

"நம் வீட்டிலே அன்றைக்குத்தான் முதல் முதலா குடில் வைத்தோம். அன்றைக்கும் எவ்வளவு பெரிய சோதனை" என்று புலம்பிய சேவியருக்கு பதில் கூறாமல் மௌனமானாள் லில்லி. தங்கள் வீட்டில் பிள்ளைகள் ஆவலோடு முதன் முதலாக கிறிஸ்துமஸ் குடில் அமைத்த அன்று இரவு நடந்த நிகழ்ச்சி இப்போது இருவரின் நினைவுக்கும் வந்தது.

அன்று இரவு எட்டு மணியிருக்கும். வீட்டுக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு சேவியரும் லில்லியும் வாசலுக்கு வர, வாசலில் சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணி நின்றிருந்தார். நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவராக இருக்கலாம், ரொம்பக் கண்ணியமாகத் தெரிந்தார். கிறிஸ்துமஸ் குடில் அமைத்த அன்று இரவு நடந்த நிகழ்ச்சி இப்போது இருவரின் நினைவுக்கும் வந்தது.

"குடிக்க கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா?" என்று கேட்டார். லில்லி தண்ணீர் எடுத்து வர உள்ளே செல்ல, வாசலில் இருந்த பிளாஸ்டிக் நாற்காலியில் அந்த அம்மாவை உட்காரச் சொன்ன சேவியர் "ஏதாவது வீட்டு முகவரியைத் தேடறீங்களா?" என்று கேட்டான்.

"இல்லே தம்பி. எனக்கு ஊர் திருச்சி. இங்கே சின்ன மகள் சென்னையிலே டீச்சர் ட்ரையினிங் படிக்கிறாள். அவளைப் பார்த்துட்டு ரெயில் பிடிக்கப் போய்க்கிட்டிருந்தேன். ஏதோ திடீரென்று அசதியாக இருந்தது. அதுதான் கொஞ்சம் தண்ணீர் குடிச்சிட்டு புறப்படலாமுன்னு வந்தேன்". அதற்குள் லில்லி தண்ணீர் கொண்டு வந்து தர அதைப் பருகிய அவரிடம் "அம்மா, வழியிலே இரயில் ஒன்று தடம் புரண்டதாலே திருச்சி பக்கம் போகிற வண்டியெல்லாம் ரத்தாயிடுச்சுன்னு செய்தி வந்திருக்கு" என்றான் சேவியர். அப்பெண்மணியின் முகத்தில் குழப்பம் தெரிந்தது. "இரயிலில் போனால்தான் திருச்சியில் எனக்கு வீடு பக்கம். பஸ்ஸிலே போனால் பஸ் ஸ்டாண்டிலிருந்து இன்னொரு பஸ் பிடிக்க வேண்டியிருக்குமே" என்றார்.

சேவியரின் பாட்டி ஊர் திருச்சி என்பதால் அதே ஊரைப் பற்றியும், அப்பெண்மணி குடியிருக்கும் பகுதி பற்றியும் விசாரிக்க. ஊர் பற்றிய பேச்சு அவர்களுக்கிடையே இருந்த இடைவெளியைக் குறைக்க, லில்லி "அம்மா, வெளியே பனி கொட்டுது. உள்ளே வந்து உட்கார்ந்து பேசுங்க" என்றாள். கொஞ்சம் தயக்கத்தோடு உள்ளே வந்து அப்பெண்மணி தன்னைச் சுற்றி நிற்கும் சேவியர், லில்லி, மூன்று பிள்ளைகளையும் நோக்கினார்.

"உங்களுக்கு மூன்று பிள்ளைகளா?" என்று அவர் கேட்க தலையாட்டினாள் லில்லி. "எனக்கும் மூன்று பிள்ளைகள் தான். என் பேரு ராணி. சொந்த வீடு இருந்தது. என் கணவர் இறந்த பிறகு வீட்டை விற்று பெரிய மகனை டாக்டருக்குப் படிக்க வச்சேன். அவன் கல்யாணம் ஆகி பெங்களூரில் செட்டிலாயிட்டான். இரண்டாம் மகள் நர்ஸ் பயிற்சி முடித்து துபாயில் வேலை பார்க்கிறாள். கடைசிப் பொண்ணு மாதவி தான் இங்கே டீச்சருக்குப் படிக்கிறாள். அவள் தான் எனக்கு இப்போது ஆறுதல். இப்போதிருப்பது வாடகை வீடுதான் என்றாலும் இழந்ததை எண்ணி நான் வருத்தப்படறதில்லே". மனம் விட்டு அப்பெண்மணி ராணியம்மாள் பேசப் பேச அவர்களுக்குள் நெருக்கம் அதிகமானது. அவர் கேட்டார் " நீங்க கிறிஸ்தவங்களா?



இயேசுவுக்கு குடில் வச்சிருக்கீங்க போலிருக்கு. நான் கூட சின்ன வயசிலே சிஸ்டர்ஸ் நடத்துற பள்ளியில் தான் படிச்சேன். ரொம்ப ஒழுங்கு முறை. பிள்ளைகள் நல்லாப் படிக்கிறாங்களா?" என்று கேட்டார். சேவியரும் லில்லியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

மூன்று பிள்ளைகளில் இரண்டாவது மகள் "பாட்டி, நாங்க நல்லா படிக்கிறோம். ஆனால் ஸ்கூல் பீஸ்தான் கட்டலை. லீவு முடிஞ்சு ஸ்கூல் திறந்ததும் பீஸோடுதான் வரணுமுன்னு சொல்லிட்டாங்க" என்று குடும்ப நிலைமையை போட்டுடைத்தாள். "போய்ப் படிங்க" என்று பிள்ளைகளை அங்கிருந்து விரட்டி விட்டாள் லில்லி. சேவியர் சொன்னான் "தனியார் கம்பெனியிலே வேலை பார்க்குறேன். பிள்ளைகள் வளர வளர செலவு அதிகமாயிடுச்சு. சிரமப்பட்டு சமாளிக்க வேண்டியிருக்கு.வீடு கடனில் இருக்கிறது. அப்பா வச்சிட்டுப் போன இந்தப் பழைய வீட்டுக்கு மாதாமாதம் பணம் கட்டறதுனாலே கொஞ்சம் கஷ்டம்" என்றான்.

"கஷ்டம்தான் தம்பி. இந்தக் காலத்திலே பிள்ளைகளைப் படிக்க வைக்கிறதுக்கு நிறையதான் செலவாகுது. எல்லாம் சரியாகிவிடும்" என்று ராணியம்மாள் சொல்ல ஒருவருக்கொருவர் கஷ்டங்களைப் பகிர்ந்து கொள்ளுமளவுக்கு நெருக்கமான உறவாகிவிட்ட சூழ்நிலை அங்கே நிலவியது.

"இன்று இரவு இங்கேயே தங்கிவிட்டுக் காலையிலே புறப்படுங்கம்மா. ஊர் போய்ச் சேர்ந்ததும் போன் பண்ணுங்க" என்ற சேவியரிடம் ஏதோ சிந்தனையோடு "தம்பி ஒரு பேப்பரும் பேனாவும் கொடுங்க.

உங்கள் போன் நம்பரை எழுதிக்கிறேன்'' என்றார். அவ்விதமே சேவியர் போன் நம்பரை அவரிடம் தந்தான்.

ராணியம்மாளை சாப்பிடச் சொல்லி வற்புறுத்த,''பிள்ளைங்க பசியாய் இருப்பாங்க. நீங்க போய்ச் சாப்பிடுங்க. எனக்கு கொஞ்சம் நெஞ்செரிச்சலா இருக்கு. இப்படியே ஓரமா கொஞ்ச நேரம் நாற்காலியில் சாய்ந்து இருக்கேன்'' என்று சொல்ல சேவியரும் லில்லியும் பிள்ளைகளோடு சாப்பிட அமர்ந்தனர்.

"எத்தனை வருஷமா குடில் வச்சிருக்கீங்க?'' என்று கேட்ட ராணியம்மாளிடம் "இதுதாம்மா முதல் வருஷம், முதல் நாள். பிள்ளைகள் மூணு பேரும் சேர்ந்து பண்ணியிருக்காங்க'' என்றாள் லில்லி. மெல்ல எழுந்த ராணியம்மாள் குடிலை நெருங்கி குனிந்தவாறே ரசித்துக் கொண்டிருந்து விட்டு "குழந்தைங்க அருமையா பண்ணியிருக்காங்க'' என்று பாராட்டியபடி மறுபடியும் நாற்காலியில் வந்து அமர்ந்தார்.

இரவு உணவு முடித்து பிள்ளைகள் தூங்கப் போக, சேவியரும் லில்லியும் ராணியம்மாளிடம் பேசிக் கொண்டிருந்தபோது திடீரென அவருக்கு முகத்தில் வியர்க்கத் தொடங்கியது. "தம்பி, என்னவோ தெரியலை. நெஞ்சு படபடன்னு அடிக்குது. எரிச்சல் அதிகமாயிருக்கு. இதுமாதிரி எப்பவும் வந்ததில்லே. பக்கத்திலே டாக்டர் இருந்தா சொல்லுங்க'' என்று கூறி முடிக்கும் முன்னே நெஞ்சைப் பிடித்துக் கொண்டார் அவர். இருவரும் பதறிப் போயினர்.

அவசரமாக ஆட்டோ பிடித்து அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அவரை அட்மிட் செய்தான் சேவியர். அதற்குள் அந்த அம்மாவின் கைப்பையில் கிடைத்த சின்ன நோட்டுப்புத்தகத்திலிருந்த சின்ன மகள் மாதவியின் நம்பரைத் தேடிப்பிடித்து செல்போனிலிருந்து விஷயத்தை சேவியர் சொல்ல ஒரு மணி நேரத்தில் மாதவியும் மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தாள்.

அப்போதுதான் மாதவி தன் தாயைக் கடைசியாகப் பார்த்தது. ராணியம்மாள் சிகிச்சை பலனளிக்காமல் மாரடைப்பால் மரித்துப் போனார். உடல் திருச்சிக்குக் கொண்டு செல்லப்பட சேவியரும் லில்லியும் ஒரு பெரும் இழப்பைச் சந்தித்தது போன்ற உணர்வில் வருத்தப்பட்டனர். அன்று சந்தித்துப் போன ராணியம்மாள் மகள் மாதவிதான் இப்போது போன் செய்து தன் தாயின் மோதிரத்தைக் காணவில்லை என்கிறாள். அதனால்தான் சேவியரும் லில்லியும் புலம்பிக் கொண்டிருக்கின்றனர்.

மூன்று தினங்கள் ஓடியிருக்கும். குடிலைப் பார்த்துக் கொண்டிருந்த கடைக்குட்டிப் பையன் கையில் சின்னப் பொட்டலத்துடன் தன் தாயிடம் ஓடி வந்தான். "அம்மா, இது குழந்தை இயேசுவின் தொட்டிலுக்குப் பின்னால் இருந்தது'' என்றபடி கொடுக்க, அந்தப் பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்தாள் லில்லி. உள்ளே ஒரு தங்க மோதிரம். அந்தக் காகிதத்தில் 'பிள்ளைகள் படிப்புக்காக இந்தப் பாட்டியின் கிறிஸ்துமஸ் பரிசு' என்று எழுதியிருந்தது.

தன் கணவன் வந்ததும் லில்லி நடந்ததைச் சொல்ல, அவனும் உடனடியாக மாதவிக்குப் போன் செய்ய, மறுநாளே மாதவியும் அவர்கள் வீட்டுக்கு வந்தாள். ராணியம்மாள் எழுதி வைத்திருந்த காகிதத்தையும், மோதிரத்தையும் அவளிடம் ஒப்படைக்க, தன் தாய் கடைசிக் காலத்தில்

அணிந்திருந்த மோதிரத்தை இழக்க மனம் வராத மாதவி நன்றிகூறிப் பெற்றுச் சென்றாள். எதிர்பாராத ஒன்றின் இழப்புக்காக இலேசான வருத்தம்தான் அவர்களுக்கு இருந்தது.

விடுமுறை முடிந்து பள்ளி திறக்க இன்னும் மூன்று தினங்களே இருக்க பணத்துக்காக சேவியர் அலைந்து கொண்டிருந்தான். அன்று மாலை சோர்வோடு வீடு திரும்பியவனின் கையில் தபாலில் வந்த உறையைக் கொடுத்தாள் லில்லி. பிரித்துப் பார்க்க ராணியம்மாள் மகள் மாதவிதான் எழுதியிருந்தாள்.

“என்னை மன்னித்து விடுங்கள். அம்மா உங்களுக்குக் கொடுத்த மோதிரத்தை திரும்பப் பெற்றுக்கொண்ட தவறு என்னை உறுத்துகிறது. அம்மாவின் மோதிரத்தை இழக்க எனக்கு மனம் வரவில்லை. அவரின் நினைவாக எனக்குத் தேவைப்படுகிறது. அதே நேரம் அம்மா ஆசைப்பட்டதை நிறைவேற்றுவதும் என் கடமை. துபாயில் இருக்கும் அக்கா எனக்கு அனுப்பிய பணத்திலிருந்து பிள்ளைகள் படிப்புக்காக இருபதாயிரம் ரூபாய்க்கு உங்கள் பெயரில் காசோலை அனுப்பியிருக்கிறேன். மறுக்க வேண்டாம். அம்மாவின் ஆன்மா சாந்தியடைய அவரின் கடைசி விருப்பத்தை நிறைவேற்ற எனக்கு இந்த வாய்ப்பைக் கொடுங்கள் உங்கள் சகோதரியாக நினைத்து... இப்படிக்கு மாதவி” என்று அக்கடிதத்தில் எழுதியிருந்தது.



தங்கள் வீட்டில் முதன்முதலாய் குடில் வைத்த நாளின் இரவில் நடந்த நிகழ்வுகளின் நினைவுடனும், ராணியம்மாளைப் போன்றே அவர் மகள் மாதவியின் பகிர்வு மனப்பான்மை வெளிப்படுத்திய வியப்புடனும் கையில் காசோலையோடு நின்றிருந்த சேவியரும் லில்லியும் குடிலில் படுத்திருக்கும் குழந்தை இயேசுவை நோக்கினர். எல்லோரையும் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருப்பதுபோல் இருந்தது இயேசு பாலனின் புன்னகை!

ரோனா ஆல்பர்ட்



## கடற்கரை ராகம் மாத இதழ் தொடர்ந்து வெளிவர உதவி செய்தவர்கள்

| | | |
|---|---|---|
| சௌரியம்மாள் | – செல்லப்பட்டினம் | - 1000 |
| ரீனா | – திருச்சி | - 1000 |
| செபஸ்டியன் | – சந்தோஷ்புரம் | - 1000 |
| ரொடாடன் ஜோஸ்பின் குடும்பத்தினர் | – பாலவாக்கம் | - 1000 |





# சாட்சியங்கள்

**சாட்சி 1:** என் பெயர் ஆரோக்கிய மேரி, நான் கொட்டிவாக்கத்தில் இருக்கிறேன். எனது மகன் Cricket – ல் இருக்கிறான் தமிழ் நாடு அளவில் 116 போட்டி நடந்தது. அதில் அவன் வெற்றி பெற்று அடுத்த கட்டத்திற்கு போக வேண்டும் என்று அந்தோணியார் வழியாக ஜெபித்தேன் என் ஜெபம் கேக்கப்பட்டு, *State Level* – க்கு தேர்ச்சி பெற்று விட்டான்.

புனித அந்தோணியார் வழியாக இறைவன் செய்த நன்மைகளுக்கு கோடான கோடி நன்றி.

**சாட்சி 2:** என் பெயர் தனபாக்கியம். நான் இதே பங்கில் வசிக்கிறேன். எனது மகள் திருமணம் முடிந்து 8 ஆண்டுகளாக குழந்தை இல்லை, நான் அந்தோணியார் வழியாக ஜெபித்தேன். அழுதேன்...

என் மகளுக்கு 2 ஆண் குழந்தைகள் பிறந்துள்ளன. இறைவனுக்கு நன்றிகள்

**சாட்சி 3:** என் பெயர் வேத வள்ளி, நான் பேசின் பிரிட்ஜ், தூய சகாய மாதா பங்கில் வசிக்கிறேன்.

கடந்த 18–04–2023 அன்று முதன் முறையாக இந்த ஆலயம் வந்தேன். வாழ்க்கையில் பிரச்சனைகள், இழப்பு, வேலை இல்லாத நிலை என்று மிகவும் குழப்பமான நிலையில் அழுது ஜெபித்தேன். இறை அருளால், மே மாதம் 3–ம் தேதி பங்கு சந்தையில் சேர, தேர்வு எழுதினேன், தேர்ச்சியும் அடைந்து இன்று பங்குச்சந்தை மேலாளர் பதவி கிடைத்துள்ளது.

இன்று சாட்சியாக புனித அந்தோணியாருக்கும், அவர் வாயிலாக கடவுள் செய்த நன்மைக்கும் நன்றி சொல்லி, ஒரு சிறு தொகை அன்னதானத்திற்கு கொடுத்து மகிழ்ச்சி அடைந்தேன். நன்றியும், புகழும், இறைவனுக்கே...

**சாட்சி 4:** என் பெயர் ஜெய்சிங், நான் ***BSC Coputer SCience*** படித்துவிட்டு வேலை கிடைக்காமல், என் அப்பாவின் கடையில் 4–5 வருடமாக வேலை செய்து கொண்டு இருந்தேன். வேலை செய்ய முடியாத நிலை I-T படிக்க சென்றேன் அப்போதுதான் இங்கு தொடர்ந்து வந்து செபித்தேன், எப்போது Interview சென்றாலும் இங்கு வந்து ஜெபித்து விட்டுதான் செல்வேன்,. 40க்கும் மேற்பட்ட Interview சென்றும் வேலை கிடைக்கவில்லை.

ஒரு நாள் நற்கருணை ஆராதனையின் போது, 'ஆண்டவரே என்னை குறித்து உமது சித்தம் என்ன? எனக்கு வெளிப்படுத்தும் என்று மன்றாடினேன் கண் மூடி ஜெபித்த வேளையில் ஒரு வார்த்தை வந்தது இணைச்சட்டம் 28:1– 2 என்று கண்டேன். வீட்டிற்கு சென்று, இதை வாசித்தேன். தொடர்ந்து தினமும் பைபிள் வாசித்தபோது. குடும்பத்தில் சில மாற்றம், சமாதானம் கிடைத்தது. ஆனால் எனது Careerup காரணமாக வேலை கிடைக்கவில்லை. முயற்சித்துக் கொண்டே இருந்தேன்.

3–வது Interviewவில் வெற்றி அடைந்து இறைச்சித்தம் இதுவென எண்ணி பணியில் இணைந்தேன். இப்போது ஒரு Software Company–ல் வேலை பார்க்கிறேன்.

**புனித அந்தோணியாருக்கு கோடான நன்றிகள், இயேசுவுக்கே புகழ்!**

என் கடவுளே, உம்மில் நம்பிக்கை கொள்கின்றேன். தி பா 25:2

# அருள்மிகப் பெற்றவர் !

முனைவர். ம. டார்த்தி செல்வ மேரி.



அன்று ஏனோ இனம் புரியாத மகிழ்ச்சி புது வெள்ளம் கரைபுரண்டு ஓடுவது போல் அந்தக் கன்னிப்பெண்ணின் மனதில் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. இறைமாட்சியை தன் உள்ளத்தில் எண்ணியவளாய் மெய்மறந்து நின்றவளை 'மரியா' என்று அம்மா அன்னம்மாள் அழைத்த பொழுதுதான் சுயநினைவிற்கே வந்தவளாய் விரைந்து சென்று தாயின் முன்னால் நின்றாள். பால்வடியும் முகத்தோடு ஒளிரும் நிலவாய் நிற்கும் தம் மகளைக் கட்டியணைத்து உச்சி முகர்ந்த தாய், “மரியா நான் வீட்டிற்கு வேண்டிய பழங்களை வாங்கி வரச் செல்கிறேன். நீ மாவு பிசைந்து ரொட்டிகளைச் சுட்டுவை. உன் மிருதுவான கையால் சுட்ட ரொட்டி என்றால் உன் தந்தைக்கு மிகவும் பிடிக்குமே” என்று சொல்லிக் கொண்டே மகளின் கன்னத்தை வருடி அன்பு முத்தம் தந்துவிட்டு வெளியில் சென்றார். தாயை சில நிமிடங்கள் தன்அன்பு நிறை விழிகளால் பார்த்துவிட்டு உள் அறைக்குச் சென்றவள் அப்படியேஉறைந்து போய் நின்றாள்.

இதயம் படபடக்க நெஞ்சம் மகிழ்ச்சியால் துள்ள, கண்கள் விண்ணவர்களைப் போல அசைவின்றி நிற்க, தன்னை மறந்து நின்றாள். அவளுக்கு முன்னால் கடவுளின் முப்பெரும் அதிதூதர்களில் ஒருவரான, கடவுளின் திருமுன் நிற்கும் பேற்றினைப் பெற்றவரான 'கபிரியேல்' நின்று கொண்டிருந்தார். அவர் வாய் திறந்து “அருள் மிகப்பெற்றவரே, வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்” என்றார். ஆபிராமை, ஆபிரகாம் என்றழைத்த தேவன், யாக்கோபை, இஸ்ரயேல் என்று அழைத்ததேவன் இங்கே மரியாவுக்கு அருள்மிகப் பெற்றவரே” என்ற பெயரை கபிரியேல்தூதர் மூலம் அனுப்பி வைக்கிறார். இந்த வார்த்தைகளைக் கேட்டதும் மரியா செக்கரியாவைப் போல் அச்சமடையவில்லை. மாறாக கலக்கம் அடைகிறார்.மோசே பெரும் மக்கள் திரளுக்கு தலைவனாய் நியமிக்க, எரியும் முட்செடிநடுவில் கடவுள் அழைத்த போது அச்சம் அவரை ஆட்கொண்டது. “ஆண்டவரே எனக்கு வாய் திக்கும்; நாவும் குழறும்” என்றார். எசாயா இறைவாக்கினர் பணிக்கு அழைக்கப்பட்டபோது, “ஐயோ! நான் அழிந்தேன், ஏனெனில், தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மனிதன் நான்” என்றார். இறைவாக்கு உரைக்க இளம் வயதில் எரேமியா அழைக்கப்பட்டபோது “என் தலைவராகிய ஆண்டவரே! எனக்கு பேசத் தெரியாதே, சிறு பிள்ளைதானே”என்றார். இவர்களுக்கான அழைப்பு செல்... சொல்...” என்பதே. மரியாவுக்கான அழைப்பு எப்படிப் பட்டது என்றே தெரியவில்லை. தொடக்கத்தில் இருந்தே தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு கடவுளின் உடனிருப்பிற்கும், இறை வெளிப்பாட்டிற்கும்



தன்னை முழுவதுமாக அர்ப்பணித்தவள் என்பதால் அச்சம் ஆட்கொள்ளவில்லை. கலக்கமே பெற்றிருந்தனர். (தெபோரா, எஸ்தர், ரூத்து. யூதித்து) அவர்களைப் போன்றதொரு அழைப்போ என்றெல்லாம் எண்ணிக் கலங்கிய மரியாவின் லீலி மலரைப் போன்ற தூய்மையான முகத்தைக் கண்ட வானதூதர், மரியாவுக்கான அழைப்பைத் தெளிவாக விவரிக்கிறார் மரியாவுக்கான அழைப்பு செல்... சொல்... என்றஅழைப்பு அல்ல. சவால் நிறைந்த சாட்சிய வாழ்வுக்கான அழைப்பு. தாவீதின் அரியணையை ஆளப்போகும், கடவுளின் மகனை வயிற்றிலும் வளர்ப்பிலும் வாழ்விலும் சுமப்பதற்கான அழைப்பு. யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் நிலைத்த ஆட்சி அளிக்கப் போகும் பெரியவரான கடவுளின் மகனை கருவில் சுமப்பதற்கான அழைப்பு. மனிதனாகப் பிறக்கப் போகும் கடவுளைப் பெற்று, பெயர் சூட்டி, வாழ்வோடு கூடிய கல்வியைப் புகட்டி, வாழ்வியலை வாழ்வாக்குவதற்கான அழைப்பு என்பதை விவரிக்கிறார்.

தனது அழைப்பில் தெளிவு பெற்ற அந்தக் கன்னிப் பெண்ணுக்கு, இன்னும் ஒரே ஒரு ஐயம் “நான் கன்னி ஆயிற்றே!” என்பதே அதனையும் தெளிவாகக் கேட்டு விடுகிறார். செக்கரியாவும் இதே போன்றதொரு வினாவைத் தொடுக்கிறார். தண்டனை பெறுகிறார்.

முன்னோர்களான சாரா, ரெபேக்கா, ராக்கேல், சாமுவேலின் தாய் அன்னா ஆகியோருக்கு இறைவனின் கருணையால் வலிமையால் குழந்தை பிறந்திருக்கிறது என்ற வரலாற்று உண்மையை அறிந்திருந்தும், “நான் வயதானவன். அதுபோல் என் மனைவியும் வயது முதிர்ந்தவள்” என்று கடவுளின் வல்லமையை உணராமல் பேசியதால் தான் செக்கரியா, குழந்தை யோவானுக்குப் பெயர் சூட்டும்வரை பேச்சுத்திறன் அற்றவராய் இருந்தார். ஆனால் மரியாவின் வினாவோ குழந்தை பிறக்க வேண்டும் என்ற இயற்கை நியதிக்கு, திருமணம் முடிந்திருக்க வேண்டும்; ஒரு ஆண்மகனின் உடனிருப்பு வேண்டும். ஆனால்... இதுவரை அவள் கணவன் இல்லாமல் குழந்தை பிறப்பு என்பதை கேட்டதோ, பார்த்ததோ, யூத வரலாற்றில், பிற இனத்தில், நிகழ்ந்ததோ இல்லை என்பதால் இவ்வாறு கேட்டாள். மரியாவின் வெளிப்படையான அந்த வினாவிற்கு அதிதூதர் சரியான விளக்கத்தைத் தருவதோடு ஒரு அடையாளத்தையும் தந்து தெளிவு படுத்துகிறார். தூய ஆவியின் வருகை குறித்தும் சாலமோன் கட்டிய எருசலேம் தேவாலயத்தை ஆண்டவரின் மாட்சி நிரப்பி ஆலயம் எவ்வாறு தூய்மை நிலை அடைந்ததோ அதைப் போலவே தூய ஆவியானவரின் மாட்சி பிறக்கப் போகும் தூய குழந்தையை நிரப்பும் என்று கூறியதோடு, இதுவரை கருவுற இயலாதவர், குழந்தைப்பேறு அற்றவர், மலடி என்றெல்லாம் தூற்றப்பட்ட முதிர் வயதுப் பெண்ணான, உம் உறவினளான எலிசபெத்திற்கு இது ஆறாம் மாதம் என்ற புதிருக்கான விடையையும் எடுத்துரைக்கிறார்.



ஆவியானவரைக் குறித்தும் எலிசெபத்தைக் குறித்தும் சொல்லப்பட்ட செய்திகளை முழுமையாக உணர்ந்தார். தூய ஆவியானவரின் மாட்சிமரியாவை நிரப்பிற்று. தன் அழைப்பு தனிவகை அழைப்பு. அது இறைவலிமையால் மட்டுமே கூடும் என்பதை உணர்ந்தவளாய் திட நம்பிக்கையோடு முழந்தாளிட்டாள். “நான் ஆண்டவரின் அடிமை; உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்” என்று கடவுளின் திருவுளத்திற்குத் தன்னை முழுவதுமாக கையளித்தாள். அவள் உடல் முழுவதும் இனம் புரியாத மகிழ்ச்சி புதுப்புனலாய் புரண்டோடியது. வானதூதர் கபிரியேல் மரியாவை விட்டு அகன்றார்.

வானதூதர் தன்னை விட்டு விலகிச் சென்ற பிறகே சுயநினைவிற்கு வந்தவர் போல உணர்ந்தார் மரியா! தன்னைப் பற்றிய நற்செய்தியிலேயே மரியா தன்னை இழந்து விடவில்லை. தனக்குரிய கடமைகளை எண்ணிப்பார்த்தார். திட்டமிட்டார். முதல் கடமை தாய்மைப் பேற்றை அடைந்த எலிசபெத் என்ற முதுமை நிறைந்த தூய்மைமிகு உறவினப் பெண்ணை நினைத்தார். பயணத்தைத் தொடங்கினார். அவருக்கு உதவி புரியவும், அவரோடு நற்செய்தியின் ரகசியத்தையும், மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்ளவும், யூதா மலை நாட்டிலிருந்த எலிசபெத்தின் ஊராகிய அயின்கரீமுக்கு விரைந்து செல்கிறார். ஆண்டவரின் அடிமை, இப்பொழுதுஎலிசெபத்தின் அடிமைபோல் மாறுகிறார். இனி இவர் இளம்பெண் மரியாஅல்ல. கடவுள் தனக்கென குறித்த இலட்சிய பாதையில் பயணிக்கும்

பயணப்பெண்ணாக மாறுகிறார். இனி இவர் பயணம் தொடரும்.!



முனைவர்
ம.டார்த்தி செல்வ மேரி

## 02.01.2023 புதிய வருடத்தின் முதல் செவ்வாய் திருப்பலி நேரங்கள்

| | |
|---|---|
| காலை 6.00 am | நற்கருணை ஆராதனை, தமிழ் திருப்பலி |
| காலை 7.15 am | ஆங்கிலத் திருப்பலி |
| காலை 8.30 am | தமிழ்த் திருப்பலி |
| காலை 11:30 am | நற்கருணை ஆராதனை, தமிழ் திருப்பலி |
| மதியம் 1.30 pm | தமிழ்த் திருப்பலி |
| மதியம் 3.00 pm | தமிழ்த் திருப்பலி |
| மாலை 6:30 pm | நற்கருணை ஆராதணை, தமிழ் திருப்பலி |

**நம்பிக்கை இழந்தவர்களுக்கு நம்பிக்கையாவோம்..!**
**மகிழ்ச்சியை இழந்தவர்களுக்கு மகிழ்ச்சியாவோம்..!**
**அமைதியை இழந்தவர்களுக்கு அமைதியாவோம்..!**
**வாழ்வை இழந்தவர்களுக்கு வாழ்வாவோம்..!**
**உறவை இழந்தவர்களுக்கு உறவாவோம்..!**
**இல்லாதவர்களுடன் இருப்பதைப் பகிர்வோம்..!**



# புனித ஸ்தேவான்

அருட்பணி. **ஜார்ஜ்** திருத்தல உதவி தந்தை



திருத்தூதர் பணிகள் 6,7 அதிகாரங்களில் புனித ஸ்தேவானின் பற்றிய குறிப்புகள் தெளிவாகக் காணப்படுகின்றன. அக்காலத்தில் கிரேக்க மொழி பேசும் ஹெலனிஸ்ட் எனப்பட்ட சிறுபான்மை யூதர்களின் வழி வந்தவர் ஸ்தேவான். இயேசுவின் நற்செய்தி பணியில் ஈடுபட்ட திருத்தூதர்களால் மதம் மாறிய அவர், அவர்களின் சீடர்கள் கூட்டத்தில் ஒருவரானார். திருத்தூதர்களின் போதனைகளால் ஈர்க்கப்பட்ட மக்கள் திரளுக்கு உணவளிக்கும் வழிமுறைகளில் தொய்வு ஏற்பட்டது உணவு வழங்குவதிலும் பெரிதும் பாராபட்சம் காட்டப்படுவதாக முணுமுணுப்புகள் எழுந்தன.

மக்களைக் கவனிப்பதில் தங்கள் நற்செய்திப் பணியின் எழுச்சிக்கு தடை ஏற்படலாகாது என்று தீர்மானித்த திருத்தூதர்கள் தங்களை நாடி வருவோரை கவனிக்கும் பொறுப்பை திருத்தொண்டர்களிடம் ஒப்படைத்து தங்கள் பணி தொடர்ந்தனர். நற்செய்தி போதனையைக் கேட்டு திருமுழுக்கு பெறும் மக்களின் உணவு மற்றும் தங்குமிடம் முதலியவற்றைக் கவனிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு திருத்தொண்டர்களின் ஒருவரே ஸ்தேவான்.

ஸ்தேவான் ஒரு நற்செய்தியாளராக, சிறந்த பண்புகள் கொண்ட நல் மனிதராக விளங்கினார். எருசலேமில் யூதர்களின் செபக் கூடங்களில் யூதர்களிடம் மத விவாதங்களில் ஈடுபட்டார். யூத மத குருமார்கள் உட்பட யூதர்களின் சமயமாற்றத்தின் எண்ணிக்கைளின் வளர்ச்சி ஓர் எதிர்வினையைத் தூண்டியது. அவர் தலைமைச் சங்கத்தாரால் குற்றம் சாட்டப்பட்டார். ஆயினும் தூய ஆவியின் வாயிலாக அவர் பேசிய வார்த்தைகளை எவராலும் எதிர்த்து நிற்க இயலவில்லை.

ஸ்தேவானின் பதில்கள் தலைமைச் சங்கத்தினருக்கு யூத சமய சட்டங்களின் விரோதமான செயல்பாடுகளாக உணரப்பட்டன. அவர்கள் மக்களையும், மூப்பர்களையும், மறைநூல் அறிஞர்களையும் ஸ்தேவானுக்கு எதிராகக் கிளர்ந்தெழச் செய்தனர். எருசலேம் ஆலயத்தையும், திருச்சட்டத்தையும் எதிர்த்து அவர் ஓயாமல் பேசி வருவதாகவும், நசரேனாகிய இயேசு, மோசேவின் சட்டத்தையே மாற்றி விடுவார் என்று போதிப்பதாகவும் கூறப்பட்ட புகாரில் தலைமைச் சங்கத்தின் முன் ஸ்தேவான் கைதியாக நிறுத்தப்பட்டார்.

குற்றச்சாட்டுகள் உண்மைதானா? என தலைமைக்குரு எழுப்பிய வினாவுக்கு



பெற்றுக்கொள்வதை விட கொடுத்தலே பேறுடைமை என்று ஆண்டவர் இயேசு கூறியதை நினைவு கூறுங்கள். தி ப 20:35

ஸ்தேவான் அளித்த விளக்கம் தலைமைச் சங்கத்தினருக்கு பெரும் கசப்பையே தந்தது.

முதுபெரும் தந்தை ஆபிரகாம் தொடங்கி, இறைமகன் இயேசு வரை தொடர்புடைய செய்திகளை அவர் தம் நீண்ட உரையால் வெளிப்படுத்த, அவர்கள் உள்ளம் கொதித்தெழுத்து பற்களை நற நற வெனக் கடித்தார்கள்.

அவர்களின் சினத்தைப் பொருட்படுத்தாத ஸ்தேவான் தூய ஆவியின் வல்லமை பெற்றவராய் வானத்தை உற்று நோக்கி மாட்சிமை மிகு கடவுளையும், இறைமகன் இயேசுவையும் தரிசித்தார்.இக்காட்சியை தம் சொற்களால் வெளிப்படுத்த எதிரிகள் ஸ்தேவானை எருசலேம் நகருக்கு வெளியே தள்ளி அவர் மீது கற்களை எறிந்தனர். அஞ்சாத அவர் “ஆண்டவராகிய இயேசுவே எனது ஆவியை ஏற்றுக் கொள்ளும்” என்று வேண்டியதுடன், இயேசுவின் பாணியிலேயே அந்த எதிரிகளை மன்னிக்கவும் செய்தார்.

இயேசுவின் மறுவருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த ஸ்தேவான் முதல் இரத்த சாட்சியாக உயிர் துறந்தார். கிரேக்க மொழியில் புனிதரின் பெயருக்கு மகுடம் என்பது பொருளாகும். தம் உயிர்த் தியாகத்திற்காக கடவுளால் மகுடம் சூட்டப்பட்ட முதல் மறைச் சாட்சியாக புனித ஸ்தேவானை திருஅவை நினைவு கூர்கிறது.



## கிறிஸ்து பிறப்பு பெருவிழா திருப்பலி நேரம்

| நாள் | நேரம் | திருப்பலிகள் |
|---|---|---|
| 24. 12. 2023 | இரவு 9:30 pm<br>இரவு 11:30 pm | ஆங்கிலத் திருப்பலி<br>தமிழ்த் திருப்பலி |
| 25. 12. 2023 | காலை 6:30 am<br>காலை 7:15 am<br>காலை 9:30 am<br>காலை 11:00 am<br>மாலை 6:00 pm | தமிழ்த் திருப்பலி<br>தமிழ்த் திருப்பலி<br>ஆங்கிலத் திருப்பலி<br>தமிழ்த் திருப்பலி<br>தமிழ்த் திருப்பலி |

## 2024 புத்தாண்டுத் திருப்பலி நேரங்கள்

| நாள் | நேரம் | திருப்பலிகள் |
|---|---|---|
| 31. 12. 2023 | இரவு 9:30 pm<br>இரவு 11:30 pm | ஆங்கிலத் திருப்பலி<br>தமிழ்த் திருப்பலி |
| 01. 01. 2024 | காலை 6:30 am<br>காலை 7:15 am<br>காலை 9:30 am<br>காலை 11:00 am<br>மாலை 6:00 pm | தமிழ்த் திருப்பலி<br>தமிழ்த் திருப்பலி<br>ஆங்கிலத் திருப்பலி<br>தமிழ்த் திருப்பலி<br>தமிழ்த் திருப்பலி |

அவர்தம் சொற்கேட்டு நடக்கும்
வலிமை மிக்கோரே! ஆண்டவரின் தூதர்களே!
அவரைப் போற்றுங்கள். தி பா 103:20

அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா
மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!

பெற்றுக்கொள்வதை விட கொடுத்தலே பேறுடைமை என்று ஆண்டவர் இயேசு கூறியதை நினைவு கூறுங்கள். தி ப 20:35



# திருகுடும்ப விழா



**முன்னுரை**

அன்பு சகோதர சகோதரரிகளே கிறிஸ்து பிறப்பு பெருவிழாவுக்கு அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமையை நமது தாய் திருஅவை திருக்குடும்ப பெருவிழாவாக கொண்டாடி மகிழ்கின்றது. எத்தனை நாட்களாக இயேசுவினுடைய பிறப்பைப் பற்றியும் இயேசுவைப் பற்றியும் சிந்தித்தனர் இன்றைக்கு அவரின் திருக்குடும்பத்தை பற்றியும் சிந்திக்கவும் அழைக்கப் பட்டிருக்கிறோம் கடந்த வருடம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் Feb 23 அன்று புதிய தம்பதிகளை பார்க்கும் பொழுது ஒரு திருக்குடும்பத்தை எப்படி உருவாக்குவது என்று அழகாய் கூறினார். இன்றைய வாசகங்களின் அடிப்படையிலும் நமது திருத்தந்தையின் செய்தியின் அடிப்படையிலும் எப்படி ஒரு திருக்குடும்பமாய் நம் குடும்பங்களை மாற்றுவது என்பதை இந்நாளிலேயே நாம் சிந்திப்போம்.

**1. கடவுளை மையப்படுத்தும் பொழுது**

பழைய ஏற்பாட்டில் திருக்குடும்பமாய் திகழ்ந்த ஆபிரகாம் சாராவும் புதிய ஏற்பாட்டில் திருக்குடும்பமாய் இருந்த அன்னை மரியாகவும் சூசையப்பரும் கடவுளை மையப்படுத்தி வாழ்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

ஆபிரகாமை ஆண்டவர் கடவுள் நான் காண்பிக்கும் ஊருக்கு செல் என்று சொல்கின்ற வேளையில் தாம் எங்கே போக வேண்டும் என்று தெரியாது இருந்தும் அவர் புறப்பட்டு செல்கிறார் ( எபி 1:11) அப்படியாகவே தன்னுடைய முதிர்ந்த வயதிலும் உன் சந்ததியை நான் வானத்து விண்மீன்களைகளைப் போல பெருகச் செய்வேன் என்று கடவுள் சொல்ல இது எதிர் நோக்குக்கு இடம் தராதது போல் இருந்தாலும் கூட ஆபிரகாம் அவர்கள் தயக்கம் இல்லாமல் கடவுள் மீது நம்பிக்கை கொள்கிறார் தன் வாழ்க்கையில் கடவுளை மையப்படுத்துகிறார். (உரோ4:17) எனவே ஆண்டவர் கடவுள் அவருடைய இனத்தை பெருக்கி அவருடைய நம்பிக்கையின் காரணமாக அவரை நம்பிக்கையின் தந்தையாக உயர்த்துகிறார் அப்படி ஆகவே சாரா அவர்களும் கூட தன்னுடைய வாழ்க்கையில் ஆண்டவர் கடவுளை மையப்படுத்தின ஒரு வாழ்க்கை வாழ்ந்தார். கணவருடைய வார்த்தையை நம்பி கணவரோடு எல்லாம் இடங்களுக்கும் சென்றார்.

நன்மை செய்யவும் பகிர்ந்து வாழவும் மறவாதீர்கள். இவ்வகைப் பலிகளே கடவுளுக்கு உகந்தவை. எபி 13:16





அன்னை மரியாளுடைய வாழ்வை பார்க்கின்ற பொழுது "வானதூதர் அவரைப் பார்த்து, "மரியா, அஞ்ச வேண்டாம்; கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்; அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். என்று சொன்ன உடனே எந்த விதமான தயக்கமும் இல்லாமல் "நான் ஆண்டவரின் அடிமை; உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்'' என்றார். (லூக்கா 1: 38) இவ்வாறு ஆண்டவர் மீது தன்னுடைய முழு நம்பிக்கையும் வைக்கிறார். கடவுளை மையப்படுத்தின ஒரு வாழ்வை வாழ்கிறார். ஆண்டவரை மையப்படுத்தி வாழ்ந்ததால் தன் வாழ்வில் எல்லா துன்பத்தையும் ஏற்றுக்கொள்கிறார்.

புனித சூசையுடைய வாழ்வை பார்க்கிற வேளையிலே "ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி, "யோசேப்பே, தாவீதின் மகனே, உம் மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால் தான். (மத்தேயு நற்செய்தி 1:21) என்று சூசையப்பருக்கு சொல்லப்படுகிற வேலையிலே புனித சூசை எந்த விதமான தயக்கமும் இல்லாமல் கடவுள் மீது நம்பிக்கை கொண்டு அன்னை மரியாளை ஏற்றுக் கொள்கிறார். இப்படியாக திருக்குடும்பம் கடவுளை மையப்படுத்தி கடவுளுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவருடைய திருச்சட்டங்களை நிறைவேற்றுகிற ஒரு குடும்பங்களாக இருக்கிறது. இன்றைக்கு நம்முடைய குடும்பங்களும் திருக்குடும்பமாக மாற வேண்டுமென்றால் நாமும் கூட நம்முடைய வாழ்வையும், நம்முடைய குடும்பத்தை கடவுளை மையப்படுத்தின ஒரு குடும்பமாக மாற்ற வேணடும்.

நம்முடைய திருத்தந்தை செல்வது போல குறைந்தது ஒரு நாளைக்கு 15 நிமிடங்களாவது குடும்பமாக இணைந்து ஜெபிப்பதின் மூலமாக நம் குடும்பங்கள் கடவுளை மையப்படுத்தின குடும்பங்களாக மாற்ற முடியும். அதன் மூலமாய் நம் குடும்பங்கள் திருக் குடும்பமாய் மாறும் மேலும் குடும்பமாக இணைந்து திருப்பலிக்கு செல்வதும் பிள்ளைகளை மறைக்கல்வி வகுப்புகளுக்கு அனுப்புவதின் மூலமாக நம்முடைய பிள்ளைகளுக்கு சிறு வயதிலிருந்து கடவுளை மையப்படுத்தின ஒரு வாழ்வை நம்மால் கற்றுக்கொடுக்க முடியும் என்றும் சொல்கிறார்.

1. முழுமையாய் அன்பு செலுத்தும் பொழுதும்.



குடும்பங்கள் திருக்குடும்பமாய் மாற வேண்டுமென்றால் நம்முடைய குடும்பங்களுக்கு உள்ளாக முழுமையான அன்பு பெருக்கெடுத்து ஓட வேண்டும் திருக்குடும்பத்தை பார்க்கின்ற வேளையில் இந்த அன்பு முழுமையாய் இருப்பதை நம்மால் பார்க்க முடிகிறது. “இனி நீங்கள் இருவர் அல்ல ஒரே உடல் என்கின்ற (தொட 2:24) இறை வார்த்தைக்கு இணங்க அன்னை மரியாளும் சூசையப்பரும் ஒருவரை ஒருவர் முழுமையாக அன்பு செய்து வாழ்ந்தார்கள் தங்கள் பிள்ளை இயேசுவையும் அதே அன்பை கொடுத்து வளர்த்தார்கள்.

**# கணவனின் அன்பு - சூசையப்பர்**

அன்னை மரியாள் கருவுற்றிருந்தும் அன்னையை ஏற்றுக் அன்னை மரியாளை எல்லாம் வகை தீமையிலிருந்தும் பாதுகாத்ததும் மற்றும் தன் மகன் காணாமல் போன பொழுதும் அன்னை மரியாளை குறை சொல்லாமல் இருவரும் இணைந்து தேடியதும் சூசையப்பர் அன்னை மரியாள் மீது வைத்திருந்த அன்பின் காரணத்தினால் தான்.

**# மனைவியின் அன்பு-அன்னை மரியாள்**

தான் கடவுளையே சுமந்து கொண்டு இருந்தாலும் கூட தன் கணவனுடைய சொல்லுக்கு கீழ்ப்படிந்து நடந்ததும், தனக்கு சத்திரத்தில் இடம் கிடைக்காது என்று தெரிந்தும் கூட தன் கணவர் பார்த்துக் கொள்வார் என்று நம்பிக்கையோடு சென்றதும் மேலும் தன் கணவன் இறப்புக்கு பின்னால் தன் குடும்பத்தை பார்த்துக் கொண்டதும் அன்னை மரியாள் யோசேப்பின் மீது வைத்திருந்த அன்பின் காரணம் தான்.

**# பிள்ளையின் அன்பு - இயேசு**



தான் கடவுளாய் இருந்தாலும் கூட தன் பெற்றோர்களை மதித்து அவர்கள் சொல்படி கேட்டதும், தன் தந்தையின் இறப்பிற்கு பின்பாக தன் தாய்க்கு உதவியதும் மேலும் தான் சாகும் தருவாயிலும் கூட தன் அன்னையை தன் அன்புச் சீடரிடம் இதோ உன் தாய் என்று சொல்லி பராமரிக்கச் சொன்னதும் இயேசு தன் பெற்றோர்கள் மீது வைத்திருந்த அன்பின் காரணத்தினால் தான்.

**# பெற்றோரின் அன்பு - அன்னை மரியாள் சூசையப்பர்**

தன் பிள்ளையை கடவுளுக்கு உகந்தது போல வளர்த்தெடுத்ததும், ஆலய காரியத்தில் ஈடுபடச் செய்ததும்,

திருச்சட்டத்தை கற்றுக் கொடுத்ததும், ஞானத்திலும் அறிவிலும் வளரச் செய்ததும் பெற்றோர்களின் அன்பை காட்டுகிறது.

இவ்வாறாக திருக்குடும்பம் ஒவ்வொருவரும் தங்களுடைய கடமையை உணர்ந்து ஒருவரை ஒருவர் முழுமையாக அன்பு செய்தார்கள். இன்றைக்கு நம்முடைய குடும்பங்களும் திருகுடும்பமாய் மாற வேண்டுமென்றால் நம்முடைய குடும்பத்தை நாம் அன்பு செய்ய வேண்டும் நம்முடைய குடும்பத்திற்காக நேரத்தை நாம் செலவு செய்ய வேண்டும் நம் பிள்ளைகளை, பெற்றோர்களை, கணவனை, மனைவியை, மேன்மையாக நடந்த வேண்டும். அப்படியாக செய்கிற வேளையில் நம்முடைய குடும்பங்களும் திருகுடும்பமாய் மாறும். நமது திருத்தந்தை கூறுவது போல குடும்பமாக அமர்ந்து உணவு உண்ணும் பொழுதும், அன்றைய நாளில் நடந்த நிகழ்வுகளை எல்லாம் பேசி மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும் பொழுதும், மேலும் குடும்பத்தில் உள்ளவர்கள் தவறுகள் செய்கின்ற வேளையில் மன்னித்து அவர்களை ஏற்றுக் கொள்ளும் பொழுதும், நம்முடைய குடும்பத்தில் அன்பு பெருக்கெடுத்து ஓடும்.

**1. உறவுகளை வளர்த்தெடுக்கும் பொழுதும்.**

இன்றைக்கும் நம்முடைய குடும்பங்கள் திருக்குடும்பமாய் மாற வேண்டுமென்றால் நம்முடைய குடும்பங்கள் உறவுகளை வளர்த்தெடுப்பதாக இருக்க வேண்டும். அன்னை மரியாளுடைய வாழ்வை நாம் பார்க்கின்ற வேளையில் அன்னை மரியாள் உறவுகள் வளர்க்கின்ற ஒரு தாயாக இருக்கின்றாள். தன்னுடைய உறவினர் முதிர்ந்த வயதில் கருவுற்றிருக்கிறார் என்று கேள்விப்பட்ட உடனே ஓடோடி சென்று எலிசபெத்தம்மாளுக்கு உதவி செய்கிறார். உறவை வளர்த்துக் கொள்கின்றார். கானாவூர் திருமணத்திற்கு சென்று அங்கே அந்த குடும்பத்தினுடைய அவமானத்தை துடைத்து உறவை வளர்த்துக் கொள்கிறார். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவையும் நாம் பார்க்கின்ற வேளையில் ஆண்டவர் இயேசு ஏராளமான வீடுகளுக்கு சென்று உறவை வளர்த்தவர் ஆக இருக்கின்றார். இப்படியாக திருக்குடும்பம் உறவை வளர்த்த குடும்பமாக இருக்கிறது இன்றைக்கு நம்முடைய குடும்பங்களும் திருக்குடும்பமாய் மாற வேண்டுமென்றால் நம் உறவுகளை நாம் வளர்க்க வேண்டும். நம்முடைய திருத்தந்தை சொல்வது போல நம்முடைய உறவுகளுடன் அடிக்கடி நாம் பேசி பழகுவோம், உறவு சிக்கல்களை நாம் களைவோம் மேலும் மன்னித்து மறந்து வாழ்வோம்.

**சிந்திப்போம்**

இன்றைக்கு நம்முடைய குடும்பங்களும் திருகுடும்பங்களாய் வாழ வேண்டும், மாற வேண்டும் என்பது கடவுளுடைய விருப்பமாக இருக்கிறது எனவே திருக்குடும்பம் காட்டி இருக்கிற இந்த மூன்று பண்புகளையும் நம்முடைய குடும்பத்தில் ஏற்றவர்களாய் நம்முடைய குடும்பங்களையும் மாற்றுவோம்.



## திருத்தல திருப்பலி நேரங்கள்



### ஞாயிற்றுக்கிழமைகளில்

காலை 06:00 மணிக்கு தமிழ் திருப்பலி

காலை 07:15 மணிக்கு தமிழ் திருப்பலி

காலை 07:15 மணிக்கு மறைக்கல்வி திருப்பலி

காலை 09.30 மணிக்கு ஆங்கிலத் திருப்பலி

பகல் 11.00 மணிக்கு தமிழ் திருப்பலி

மாலை 06.00 மணிக்கு தமிழ் திருப்பலி

### மாதத்தின் முதல் செவ்வாய்க் கிழமைகளில்

காலை 06.00 மணிக்கு ஆராதனை, தமிழ் திருப்பலி

காலை 07.15 மணிக்கு ஆங்கிலத் திருப்பலி

காலை 08.30 மணிக்கு திருப்பலி

காலை: 11.00 மணிக்கு ஆராதனை, தமிழ் திருப்பலி

பிற்பகல் 03.00 மணிக்கு திருப்பலி

மாலை 06.00 மணிக்கு ஆராதனை, தமிழ் திருப்பலி

### மற்ற செவ்வாய் கிழமைகளில்

காலை 06.00 மணிக்கு ஆராதனை, தமிழ் திருப்பலி

காலை 11.00 மணிக்கு ஆராதனை, தமிழ் திருப்பலி

மாலை 03.00 மணிக்கு திருப்பலி

மாலை 06.00 மணிக்கு ஆராதனை, தமிழ் திருப்பலி

### வார நாட்களில்

காலை 6.30 மணிக்கு ஆராதனை, தமிழ் திருப்பலி

மாலை 6.30 மணிக்கு ஆராதனை, தமிழ் திருப்பலி

காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். எசா 9:2